
கரைச்சிப் பிரிவு

# கலை விழா மலர்

1972



Donated by:
PROF. K. KAILASAPATHY

University of Jaffna
894.8115
KAR
162620(AR; MAIN)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுழை வாயில்.........

UNIVERSITY OF JAFFNA LIBRARY
394.815 KAN

வணக்கம் !

கரைச்சிப் பகுதிக் காரியாதிகாரி பிரிவுக் கலைவிழா மலரை நுகருமுன் ஒரு சில வார்த்தைகள்.

"மனித வாழ்க்கையைப் பண்படுத்துவதும் கலை; வாழ்க்கையின் மென்மையான கோணங்களுக்கு மெரு கூட்டுவதும் கலையேயாம்". என்ற அறிஞன் ஒருவனது கூற்றை மலர்க் குழுவின் சார்பில் இரசிகர்களாகிய உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

"சங்கம் வளர்த்த தமிழ்." இயல், இசை, நாடகம் எனும் முப்பிரிவை உடையது. அந்த இலக்கண வரம் பிற்கொப்ப கரைச்சிக் காரியாதிகாரிப் பிரிவின் கலை விழாவும் கொண்டாப்படுகிறது. இசையையும், நாடக வியலையும் பின்னர் கண்டு களிக்கவிருக்கின்ற இரசிகர் களாகிய உங்கள் கையில் இயற்றமிழாம் "கலைவிழா மலரை" ச் சமர்ப்பிப்பதில் அளவிலா மகிழ்ச்சியடை கின்றோம் நாம்.

உள்ளே "சொல்லேர் உழவரின்" கருத்தோவியங் கள் பலவற்றை நீங்கள் சுவைத்து அனுபவிக்கலாம். அவர்களிற் பலர் ஏற்கனவே உங்களுக்கு அறிமுகமான வர்கள். கல்வித்துறையின் கொடிமுடியாக விளங்குகின்ற பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் சிலர்; நாட கத்திற்கு ஈழத்தில் உயிரூட்டியவர் ஒருவர்; இசையே தனது மூச்சாய்ப் பாடுபடுபவர் இன்னொருவர். இத் தகைய பலரது கைவண்ணங்களை ஒரு சிறிய முன்னு ரையில் மட்டிடுதல் முடியும் தரமன்று. எனவே நுகரும் உங்களையே முடிவு செய்யுமாறு விட்டுவிட விரும்பு கின்றோம்.

"பயில்தொறும் நயம் பயக்கின்றதாய் இக் கலைவிழா மலர்" அமையுமென்று பரிபூரணமாக நம்பி விடைபெறு கின்றோம்.

162620
162620

—கலைவிழா மலர்க் குழு—

University of Jaffna
162620
Library

Donated by:-
PROF. K. KAILASAPATHY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Compliments*

**SAMUEL, SONS & COMPANY LIMITED**

ENGINEERS BUILDERS CONTRACTORS & HARDWARE MERCHANTS

371, OLD MOOR STREET P.O. BOX 46 COLOMBO 12 PHONE 32341 (3 LINES) GRAMS "ECHIRON" COLOMBO

# ராஜா கார்ப்பரேசன்

*கிளிநொச்சி.*

உங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களும்
சாய்ப்புச் சாமான்களும்

சகாய விலையிலும், நிதான விலையிலும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்.

# RAJAH CORPORATION

கூட்டுறவு மொத்த விற்பனவு நிலைய விநியோகஸ்தர்

**KANDY ROAD,** **KILINOCHCHI.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க் குழுவினர்

| | |
|---|---|
| திரு. இ. யோகநாதன் | காப்பாளர் |
| ஜனாப் எம். எம். மக்பூல் | தலைவர் |
| திரு. அ. க. இராசேந்திரம் | செயலாளர் |
| செல்வி. வி. துரைசாமி | பொருளாளர் |
| திரு. இ. த. சுப்பிரமணியம் | நிர்வாக உறுப்பினர் |
| திரு. எஸ். எஸ். சின்னத்தம்பி | ,, ,, |
| திரு. எஸ். பி. கிருஷ்ணர் | ,, ,, |
| திரு. நா. சோதிநாதன் | ,, ,, |
| பண்டிதர் மு. ஆறுமுகம் | ,, ,, |

UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சிப் பிரிவு

கலை விழாவிற்கு

எமது நல்லாசிகள்

# சுந்தரம் ஸ்ரோர்ஸ்

கண்டி வீதி,

கிளிநொச்சி.

முதல்தர

ஆடைகளுக்கு

முதல்

ஸ்தாபனம்

# SUNDRAMS STORES

KANDY. ROAD.

KILINOCHCHI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message

I am very happy to send these few words to be published in the Souvenir that is being issued to mark the staging of the Grand Art Festival sponsored by the Cultural Unit of the Karachchi D. R. O's Division. Karachchi Division is one of the most promising and fast developing areas in the district having a vast potential in agriculture, and animal husbandry. It is also an area where the possibilities of industries exist. However, the facilities available to the people in this Division for recreation purposes are thoroughly inadequate. Hence an Art Festival of this nature should go a long way in filling this vacuum. Kilinochchi is in the high priority list for the establishment of an Open Air Theatre and a Cultural Centre.

I am therefore, very glad that the Cultural Unit of the D. R. O's Division has thought of marking this occasion with a Grand Cultural Festival.

I wish the festival all success.

Wimal Amarasekera,
*Government Agent, Jaffna District.*

The Kachcheri,
Jaffna.
5-9-1972.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் அவர்களின்

# ஆசிச்செய்தி

கரைச்சிப் பிரிவு கலாச்சார சபையினரால் எடுக்கப்படுகின்ற மாபெருங் கலைவிழாவையொட்டி பிரசுரிக்கப்படுகின்ற மலருக்கு ஒரு சில சொற்களைக் கொண்ட செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்வெய்துகின்றேன். கரைச்சிப் பிரிவு யாழ் மாவட்டத்தில் நல்ல எதிர்காலத்தைக் கொண்டதும் அதிவிரைவில் முன்னேறிக்கொண்டு போவதுமான பிரிவுகளில் ஒன்று. விவசாயத்தையும் மிருக வளர்ப்பையும் விருத்தி செய்வதற்குப் போதிய வளங்கள் இப் பிரிவில் காணப்படுகின்றன. எனினும் பொழுது போக்கிற்கு ஏதுவாய வாய்ப்புக்கள் இப்பகுதியில் அருகியே காணப்படுகின்றன. எனவே இத்தகைய கலைவிழா இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பெரிதும் உதவுமென நம்புகிறேன். திறந்தவெளி அரங்கும் கலாச்சார நிலையமும் அமைக்கப்படவிருக்கும் வேலைத்திட்டப் பட்டியலில் கிளிநொச்சிக்கு அதி முக்கிய இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

எனவே இவ் வைபவத்தை மாபெரும் கலைவிழா எடுத்துக் கொண்டாடுவதற்குக் கரைச்சிப் பிரிவுக் கலாச்சாரப் பகுதி நினைத்தது சாலவும் பொருத்தமானது.

இவ்விழாவின் வெற்றிக்கு எனது நல்லாசிகள்.

செயலகம்
யாழ்ப்பாணம்
5-9-72

எம். ரி. டபிள்யூ. அமரசேகரா
அரசாங்க அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் அவர்களின்

## ஆசிச்செய்தி

கரைச்சிப் பிரிவு சரித்திர சம்பந்தமானது. மேற்குத் தேசத்திலிருந்து பறங்கியர் இங்கு வந்து இலங்கையை அடிமைப்படுத்திய காலத்திற்கு முன் கரைச்சிப் பிரிவு வன்னி நாட்டின் ஒரு பாகமாக இருந்தது. அக் காலத்தில் நாகரிகமும் கலாச்சாரமும் மிகவும் முன்னேறியிருந்ததென்பதற்குத் தற்போது கரைச்சிப் பிரிவின் பல பாகங்களில் காணப்படும் பழைய அத்திவாரங்களும் ஆலயங்களும் சான்றுக உள்ளன. உருத்திரபுரம் சிவாலாயம் ஓர் உதாரணம். இங்கேயுள்ள சிவலிங்கத்தின் ஆவுடைய சதுரவடிவமாக உள்ளது. ஆனல் இலங்கையின் மறு பாகங்களிலுள்ள சிவாலயங்களில் காணப்படும் சிவலிங்கங்களின் ஆவுடைய வட்ட வடிவமாக இருக்கின்றன. இதில் மிகுந்த சரித்திரம் உண்டு. இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சேர, சோழ, பாண்டியருடைய நாகரிகம் இலங்கையிலுள்ள வன்னிப் பகுதியிலும் சுவறியிருந்ததென்பதற்கு இது அடையாளமாக உள்ளது. அந்தக்காலத்தில் அமைக்கப்பட்ட சிவாலயங்களின் ஆவுடைய சதுர வடிவமாய் அமைக்கப்பட்டதென்பது சரித்திர உண்மை.

சிவாலயம் அமைவது இக்கிராமத்தில் அல்லது ஓர் சிறிய இடத்தில் அல்ல. சிவாலயங்கள் பெருந்தொகை மக்கள் வசிக்கும் வட்டாரங்களிலேயே அமைக்கப்படுவது வழக்கம். எனவே உருத்திரபுரம் சிவாலயச் சுற்றுடலில் ஓர் பெருந்தொகை மக்கள் நிறைந்த மாநகரம் அந்தக் காலத்தில் இருந்திருக்கவேண்டும். அதேபோல வட்டக்கச்சி, கண்டாவளை, புளியம்பொக்கணை, புன்னைநீராவி போன்ற இடங்களிலும் தற்காலத்தில் குடியேற்றத்துக்காகவும் காணி அபிவிருத்திக்காகவும் காடுகள் அழிக்கப்படும் சமயங்களில் பழைய அத்திவாரங்களும் பாழடைந்து கிடப்பதைக் காணத் தக்கதாயுள்ளது. இதிலிருந்து கரைச்சிப் பிரிவு அதற்குத் தெற்கேயுள்ள வன்னிப்பிரதேசத்தோடு இணைந்து ஓர் மாபெரும் மாகாணமாக வன்னி அரசர்களின் ஆட்சியின் கீழ் அமைந்திருந்ததென்பது புலனுகிறது.

எங்கள் நாடு சுதந்திரமடைந்ததன் பின் மேற்குத் தேச அந்நியர்களால் அழிக்கப்பட்டு காட்டால் மூடப்பட்டிருந்த பிரதேசம் தற்போது மக்களின் உபயோகத்திற்காகத் திருத்தப்பட்டு குடியேற்றப்பட்டு நாகரிகமான வட்டாரமாக அமைக்கப்படும் காலத்தில் அங்கே குடியேறும் மக்கள் சமய கலாச்சாரத் துறைகளிலும் முன்னேற்றமுள்ள மக்களாக அமைய உதவுவது சாலச் சிறந்ததே. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் சமனுக முன்னேறவேண்டும். மக்களின் பொருளாதார விருத்தி நல்ல முறையில் பலனளிக்க வேண்டுமானல் சமய பக்தியுள்ள மக்களாகவும் கலாச்சார அறிவு நிறைந்த மக்களாகவும் வளர்ச்சிபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

எனவே கரைச்சிப் பிரிவில் நடாத்தப்படும் இக் கலைவிழா வெற்றியளிக்க? வேண்டுமென்றும் அனைவருக்கும் அதிக பலன் கொடுக்க வேண்டுமென்றும் விரும்பி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ரி. முருகேசபிள்ளை
உதவி அரசாங்க அதிபர்,

யாழ்ப்பாணம்.
5-9-1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சிப் பிரிவு காரியாதிகாரி அவர்களின்

## ஆசிச்செய்தி

கலைவிழா மலருக்கு இச்சிறு செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வெய்துகிறேன். விவசாயம் இப்பிரிவுக்கு முக்கிய தொழிலாக இருக்கின்ற காரணத்தினால் இப்பகுதிவாழ் மக்களுக்கு போதிய ஓய்வு இருக்கின்றது. இவ் ஓய்வு நேரத்தை நல் வழியில் கழிப்பதற்கு கலை ஒரு கருவியாகப் பயன் படுத்தப்படலாம். தற்போது இங்கொன்றும் அங்கொன்றுமாக சில கலைத் திறமைகள் இருந்தபோதிலும் இத்திறமைகளை ஒன்று சேர்த்து கலைத்துறையில் மேலும் முன்னேறுவதற்கு போதிய வசதிகள் இப் பகுதியில் இல்லை.

கலைத்துறை முன்னேற்றத்திற்கு ஏதுவாக திறந்தவெளியரங்கு சங்கீத, நடன வகுப்புக்கள் இப்பகுதியில் இவ்வளவு காலமும் இருக்கவில்லை. இத்தேவையை வெகுவிரைவில் கரைச்சிப் பிரிவில் அமைக்கப்படவிருக்கும் கலாச்சார நிலையம் பூர்த்தி செய்வதாக அமையும். திறந்தவெளியரங்குடன் கலைக்கூடம், நடன மன்றம், கூட்ட மண்டபம் போன்ற பாகங்களைக் கொண்டதாக இக்கலாச்சார நிலையம் அமையும். அத்தகைய ஒரு நிலையத்தில் அனுபவம், தகுதி வாய்ந்த ஆசிரியர்களை வைத்து சங்கீதம், நடனம் போன்ற கலைகளை பரப்புவதும், வளர்ப்பதும் இலகுவாக அமையும்.

நாடகத்துறை இப்பகுதியில் ஏற்கனவே ஓரளவிற்கு வளர்ச்சிகண்டுள்ளது. பல நாடக மன்றங்கள் இப் பகுதியில் இருந்து வருகின்றன. இம் மன்றங்களின் படைப்புக்களை கலாச்சார நிலையம் அமைக்கப்பெற்றால் மாதமொரு முறையோ பௌர்ணமி தினங்களிலோ மேடையேற்றுவதற்கும், பல மன்றங்கள் ஒன்று சேர்ந்து பலதரப்பட்ட தங்கள் அனுபவங்களை ஒருமுகப்படுத்தி கலப்பு முயற்சியாக நாடகங்களை மேடையேற்றினால் நாடகத்தின் தரம் இப்பிரிவில் வெகு விரைவில் முன்னேறும் என்பதில் ஐயமில்லை.

இக்கலைவிழா சிறப்பாக அமைவதற்கு என் வாழ்த்துக்கள்.

காரியாதிகாரி அலுவலகம்,
கிளிநொச்சி
1-9-72

இ. யோகநாதன்
காரியாதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Message*

I have much pleasure in issuing this message on the occasion of the staging of the Grand Art Culture Festival sponsored by the Culture Unit of the Karachchi D. R. O's Division.

Promotion of Art and Culture in this fast developing Agriculture area of Northern Region is a long felt need and I am happy to note that the Karachchi Culture Unit has thought it most fitting to conduct a Grand Art Festival at this juncture.

I sincerely hope that the toiling masses of this Division can now be assured of better recreation facilities through the Zealous activities of this Cultural Unit.

I wish the Festival all success.

S. Kandiah

*Asst. Supdt. of Police.*

Police Office,
Kilinochchi.
8-9-72.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி நிறைவேற்றுப் பொறியியலாளரின்

# வாழ்த்துச் செய்தி

மனித உள்ளத்தின் உணர்ச்சிகள், வெளிப்பாடுகள், கற்பனை, தொழில் நுட்பம் முதலிய சிறப்பியல்புகளைப் பிரதிபலிக்கும் கருவிகளாகக் கலைகள் தொன்றுதொட்டு அமைந்துள்ளன. ஒரு இன மக்களின் பண்பாடு, சீலம், ஆசாரம், திருந்திய உணர்ச்சி யாவும் அந்த இன மக்களின் கலைச்சிறப்பிற்தான் தங்கியிருக்கின்றதெனின் அது மிகையாகாது.

தமிழ் இனம் தம் வாழ்க்கையில் கலைக்கு ஓர் முக்கியமான இடத்தைத் தொன்றுதொட்டு நல்கி வந்துள்ளார்கள் என்பது சரித்திரவாயிலாக அறியக் கூடியதாக இருக்கின்றது. ஆயகலைகள் அறுபத்து நான்கு என்பதும், இக் கலைகட்குத் தெய்வமாக விளங்கும் சகல கலாவல்லியாம் சரஸ்வதிக்கு ஆண்டுதோறும் தமிழ் மக்கள் விழா எடுத்துக் கலையைப் போற்றி வளர்த்துள்ளார்கள் என்பதும் பின்வரும் வெண்பாவால் தெற்றெனப் புலப்படுகின்றது.

"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்"

எந்தக் கலையை நாடினும் கலைவாணியாம் சரஸ்வதியின் துணை கொண்டு நாடினல் கல்லும் கவி சொல்லும் என்று கூறப்பட்டுள்ளது இன்னேரிடத்தில்.

இன மத மொழியால் வேறுபட்ட மக்களையும் ஒன்றுபடுத்தும் மிகச் சிறந்த தன்மை கலைக்குண்டு. தமிழ் நாட்டுப் பரத நடனத்திற்கும், இசைக்கும் மேல்நாட்டார் காட்டும் ஈடுபாடும், விருப்பும் இதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

கலைகளின் சிறப்பியல்புகளை நன்குணர்ந்த கரைச்சிப்பகுதிக் காரியாதிகாரி திரு. சி. யோகநாதன் அவர்கள் கிளிநொச்சி வாழ் மக்களின் சிறப்பைக் கருத்திற்கொண்டு கலைக்கோவில்களையும், கலைஞர்களையும் உருவாக்கும் அவாவினல் உந்தப்பட்டு கலை விழாவை எடுக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளது மெச்சற்குரியது. அன்னரின் கைங்கரியம் இனிது நிறைவேற எல்லாம் வல்ல இறைவனருள் கிடைக்க வேண்டுகிறேன்.

வணக்கம்.

கிளிநொச்சி.
10-9-72.

க. மயில்வாகனம்
நிறைவேற்றுப பொறியியலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி பட்டினசபைத் தலைவர் அவர்களின்

# வாழ்த்துரை

கிளிநொச்சிப் பட்டணத்தில் கலைவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்த விழாக் குழுவினர்களுக்கு எமது உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள். இன்றைய சூழ்நிலை யிலே எமது கலைஞர்களுக்கு நாம் ஆக்கமும் ஊக்கமும் அளிப் பது மிக அவசியம். உலக வரலாற்றை உற்று நோக்கின் எமது முன்னோர்கள் கலைக்காகத் தம் உடல், பொருள், ஆவி அத்தனை யும் அர்ப்பணித்திருக்கிறார்கள். சேர, சோழ, பாண்டிய மன் னர்களை நாம் எடுத்துக்கொண்டால் அவர்கள் கலையை மதித்து கலைஞர்களை மதித்து அவர்களின் உள்ளக்கிடக்கையை உலகறி யச் செய்து வாழ்ந்தார்கள். கலைஞர்களை வாழவைக்க அவர்கள் பொன்னும் பொருளும் அள்ளி அள்ளிக் கொடுத்தார்கள்.

இன்றுள்ள நிலையிற் கலைஞர்கள் குடத்துள் விளக்காய் இருப்பதற்குக் காரணம் நாமே. கலைகளைப் போற்றி கலைஞர் களுக்கு உயரிய இடமளித்துக் கௌரவிக்க வேண்டும். இப்படி யான விழாக்களை நடாத்துவதால் தமிழன் பெருமையை உலகறியச் செய்யலாம். எமது அருமை பெருமையை நிலை நாட்ட இப்படியான விழாக்களை அடிக்கடி தொடரவேண்டும். இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் எமது மூச்சாகவும் பேச்சாகவும் இருக்கவேண்டும். எமது கலைஞர்களை குன்றின் விளக்காய் ஒளிவிட எம்மாலான முயற்சிகளை நல்குவோமாக.

கிளிநொச்சி
25-8-72

ச. சு. முருகேசு
பட்டினசபைத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி வட்டாரக் கல்வி அதிகாரி அவர்களின்

## வாழ்த்துரை

இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் நான் பெருமைப் படுகிறேன். இது கலைவிழா மாதம். கிளிநொச்சி வட்டாரத்திலுள்ள 82 பாடசாலைகளுக்கிடையிலான கலை விழாக்கள் இம் மாதத்தில் நடை பெறுகின்றன. பூநகரி, துணுக்காய், பளை, கிளிநொச்சியாகிய நான்கு காரியாதிகாரிகளின் பிரிவுகளில் உபதெரிவுக் கலை விழாக்களை நடாத்தி முடித்தோம். இறுதிப்போட்டியை இவ்வாரம் கிளிநொச்சியில் நடாத்து கிறோம். இவ் விழாக்களில் இளஞ்சிறுர்களின் கலை உணர்வைக் கண்டு மகிழ்ந்தேன். ஊக்கமும், ஆக்கமும், உரிய சந்தரப்பமும் அளிக்கப் பட்டால் உயர்ந்த கலைஞர்களையும் கலைப்படைப்புக்களையும் எதிர்பார்க்க லாம். கரைச்சிப் பிரிவில் பரந்த, விரிந்த, சிறந்த முறையில் நடக்கும் இம் மாபெரும் கலைவிழாவில் நமது பண்டைய கலையான நாட்டுக்கூத் திற்குச் சிறப்பிடம் கொடுத்தமை பாராட்டுக்குரியது. இக் கலைவிழா இங்கு மேலும் கலைஞர்களை உருவாக்கட்டும்! கலைவிழா வெற்றி பெற எனது நல்வாழ்த்துக்கள்.

சி. தியாகராஜா,
வட்டாரக் கல்வி அதிகாரி,
கிளிநொச்சி.

வட்டாரக் கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.
9-9-72.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சி கிராமாட்சிமன்ற அக்கிராசனர் அவர்கள்

# வழங்கிய வாழ்த்துரை

ஒரு இனம் தனது தனித்தன்மையைப் பாதுகாக்க வேண்டுமாயின் அவ்வினத்தின் மொழி, கலை, கலாச்சாரம் ஆகியன பேணிப் பாதுகாக்கப்படுதல் மிகவும் இன்றியமையாதது.

வடதமிழ் மாநிலத்தின் இரண்டாவது நுழைவாயிலென அமைந்துள்ள கரைச்சிப் பிரிவில் உதயமாகியுள்ள தங்கள் கலாச்சார சபை தமிழ் பேசும் இனத்தின் மொழி, கலை, கலாச்சார பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் "கலைவிழா" ஒன்றினை நடாத்த முற்பட்டமை கண்டு யான் மிக்க பேருவகை அடைகின்றேன். இலக்கியம், இசை, நாடகம் போன்ற கலைகளை ஊக்குவதால் பண்பட்ட சமுதாயம் உருவாவதுமன்றி மக்களிடையே நிலைத்துள்ள ஏற்றத்தாழ்வு மனப்பான்மை நீங்கவும் வழிபிறக்கும்.

மேலும், பல கலைத்துறைகளிலும் முகிழ்த்த அறிவு படைத்தோரின் கலைச் செல்வங்களைத் திரட்டி "விழாமலர்" ஒன்றினைச் சமைக்கத் தங்கள்சபை செய்துள்ள முடிவு மிகப் பாராட்டுதற்குரியதாகும்.

காலாகாலங்களில் தங்கள் சபை இத்தகைய கலைவிழாக்களை நடத்தி எம்மினத்தின் மொழி, கலை, கலாச்சார பண்பாடுகள் வளரத் தங்களால் இயன்ற அளவில் சேவை செய்தல் சாலவும் வேண்டப்படுவதே.

வாழ்க தமிழ் மொழி!

வாழ்க தமிழினம்!! வெல்க தங்கள் பணி!!!

கா. செல்லையா
அக்கிராசனர்,
கரைச்சிக் கிராமாட்சி மன்றம்.

கிராமாட்சி மன்றப் பணிமனை,
பரந்தன்,
23-8-1972

Donated by:-
PROF. K. KAILASAPATHY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Visit

# JEYANANDA BAKERY & HOTEL

KANDY ROAD, KILINOCHCHI.

CAKES, BREADS, BISCUITS,
NOON DAY MEALS ETC.

**Orders will be executed at short notice**

ஜெயானந்தா பேக்கரி அன் ஹோட்டல்

கண்டி வீதி, கிளிநொச்சி.

*The Best in Liquor*

*and Spirits*

*is obtained from*

## *Kilinochchi Foreign Liquor Shop*

*Kandy Road,*

*Kilinochchi.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் ஸ்ரேர்ஸ்

கண்டி வீதி,

பரந்தன்.

பலசரக்குச் சாமான்களும்
சலுசலா பிடவைகளும்
சாய்ப்புச் சாமான்களும்
சயிக்கிள் உதிரிப் பாகங்களும்
பாட்டா பாதணிகளும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
சகாயவிலையில் பெற்றுக்கொள்ள
எமது ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்யுங்கள்

கிளை ஸ்தாபனம் :-

கிளிநொச்சி — பிடவை வியாபாரம்

விநியோகஸ்தர்கள் :

சிலோன் டுபாக்கோ கம்பெனி லிமிட்டெட்

உரிமையாளர் :

வே. பொ. சதாசிவம்

கண்டி வீதி,
பரந்தன்.

கண்டி வீதி,
கிளிநொச்சி.

உங்கள் ஆதரவிற்கு நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சிப் பிரிவு கலாச்சாரப்

# மாபெருந்

## காலை நிகழ்ச்சிகள் : ஈஸ்வரன் படமாளிகை.

கவியரங்கு, கருத்தரங்கு, நாட்டுக்கூத்து விமர்சனம்
*(காலை 9 மணிமுதல் பகல் 12-30 மணிவரை)*

## மாலை நிகழ்ச்சிகள் : உருெட்றிக்கோ மைதானம்.

கலைநிகழ்ச்சிகள். *(மாலை 6 மணிமுதல் மறுநாள் அதிகாலைவரை)*

தலைவர் : உயர்திரு. இ. யோகநாதன், இ. நி. சே.
(காரியாதிகாரி கிளிநொச்சி)

பிரதம அதிதி : உயர்திரு. எம். ரீ. டபிள்யூ. அமரசேகரா, இ. நி. சே.
*(அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம்)*

காலம் : 15-9-72 வெள்ளிக்கிழமை.

### காலை நிகழ்ச்சிகள்

**கவியரங்கு : "செத்தழியாச் செல்வம்"**

*தலைவர் :* கவிஞர் "இராஜபாரதி"

*பங்குபற்றுவோர் :* கவிஞர் ந. சிவநாதன்
,, கலியுகன்
,, கே. எஸ். சௌந்தரநாயகம்.
கவிஞர் மு. சிவலிங்கம்.
,, மு. கந்தப்பு.

**கருத்தரங்கு : "தருமத்திற் சிறந்தவன் கும்பகர்ணன், கர்ணனல்ல"**

*தலைவர் :* திரு. க. சிவராமலிங்கம்

*பங்குபற்றுவோர் :* திரு. வ. நடராசா
,, எஸ். அந்தோனிமுத்து
,, வ. கந்தசாமி
,, இ. மகாதேவன் (தேவன்)
,, த. திருநாவுக்கரசு
திரு. ந. சிவநாதன்
திருமதி கே. துரைச்சாமி
திரு. வி. கி. இராசதுரை
,, சுடர். ஆர். மகேந்திரன்
,, சி. கனகநாயகம்

நாடகம் : பரந்தன் நடனகலாமன்றம் அளிக்கும்
"இலட்சுமி சபதம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரவை அளிக்கும்

# கலைவிழா

மாலை நிகழ்ச்சிகள்

மங்கள இசை,

இன்னிசைக் கச்சேரி :

*இன்னிசையரசி, இசைமணிரத்தினம்*

**திருமதி பூமணி இராசரத்தினம்** *(சங்கீதபூஷணம்)*

வயலின் பிரம்ம ஸ்ரீ S. சர்வேஸ்வரசர்மா மிருதங்கம் திரு. P. சின்னராசா

நாட்டுக்கூத்து : முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம் அளிக்கும்

"கல்சுமந்த காவலர்"

பேச்சு பிரதம அதிதி :

பரிசில் வழங்கல் பிரதம அதிதி :

பரதநாட்டியம் : யாழ். கலா சேத்திர மாணவிகள்.

பூஜா நடனம், மயில் நடனம், அலாரிப்பு, குறவன் குறத்தி நடனம், யதீஸ்வரம், செம்பு நடனம், தில்லானா, பதம். இன்னும் பல.

நாட்டுக்கூத்து : மட்டக்களப்பு பாரதி கலாமன்றம் அளிக்கும்

"தெய்வீக திருமணம்"

நாடகம் : பரந்தன் "கெமிக்கல்ஸ்" கலைமன்றம் அளிக்கும்

"மினிஸ் கேட் மீனாட்சி"

நாதஸ்வர இன்னிசை : இராசேஸ்வரி குழுவினர்.

நாடகம் : கிளிநொச்சி "ஸ்ரார்" நாடகமன்றம் அளிக்கும்

"கண்ணன் காட்டிய வழி"

நாதஸ்வர இன்னிசை : பஞ்சாபிகேசன் குழுவினர்.

நன்றியுரை : செல்வி வி. துரைச்சாமி, *பீ. ஏ.*

*(கலாச்சார அலுவலர்)*

கரைச்சிப்பிரிவுக் கலைவிழாக் குழுவினர்.

கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PAWN BROKER

V. RAMALINGAM

47, Wolfendhal Street,

Saravanamuthu Mawatte,

Colombo. 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி மாவட்ட மெங்கும்
# கலைச்செல்வம் பெருக்கிடுவோம்

### இராஜ பாரதி

வடக்கிலங்கை வாழ்வாங்கு வாழத்தக்க
வளஞ்சுரந்து வழங்கு கிளி நொச்சிமாதா,
அடக்கியுள்ள நீர்நிலைகள் அட்டதிக்கும்
அமைத்திருக்கும் வடிகாலால் அமிர்தம் பாய்ச்ச...
நடத்தகுந்த விதை புதைத்து நாளுங்காத்து
நன்செய்யும் புன்செய்யும் பெருக்கு மக்கள்
எடுத்துழவு படைஓதை எங்குங் கேட்க...
இனிய தமிழ்ப் பண்பாடி வாழ்த்துமிந்நாள்......

வான் பார்த்து வளமாக்கும் முயற்சியாளர்
வந்துகுடி யேறியதால் வயங்கு மிவ்வூர்
பேன் பார்க்கு மந்தியினங் கெந்திப் பாய்ந்த
பெருங்காடாய் முன்னுளில் இருந்ததுண்மை!
தேன் பார்த்து அலமந்த தும்பிக் கூட்டம்
தீந்தமிழின் இசைகேட்டுத் திகைப்புற்ருேட
நான் பார்க்குங் கிளிநொச்சி மாறிப்போச்சு
நமதுகலை வளர்க்குமொரு நகருமாச்சு !!

புல்படருங் காடெல்லாந் தமிழன் போந்து
புதுக் கழனி ஆக்கிடுவான், பொன்னுய் மின்னும்
நெல் விளையச் செய்திடுவான், நினைத்தானென்ருல்
நெடும்பாறைத் தொடரெல்லாங் குடைந்துதோண்டிக்
கல் மலைமேற் காசுதரும் பெருந்தோட்டங்கள்
கண்காணச் செய்திடுவான்; கவிதையாத்துச்
சொல்லழகும் பொருளழகுஞ் சுவைக்கக் காட்டுஞ்
சுடர்'ராஜ பாரதி'யான் தொடர்ந்து சொல்வேன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடலொடு பாடலும்நம் அழகுக் கூத்தும்
அடுக்கடுக்காய் நிகழ்கின்ற விழாவெடுத்தே
ஈடறியாக் கலாசாரம் பேணுமாற்ருல்
ஈண்டுகுடி போந்தாருக் கிதுவே பொன்னுள்!
தேடரிய கலைச்செல்வம், பொருட்செல்வத்தால்
திகழ்ந்தொளிரும் உண்மையினை விளங்கிக்கொண்டே
பாடல்செயும் புலவன் யான் பாடுகின்றேன்;
பல்லாண்டு பல்லாண்டிப் பண்பு வாழ்க.

இனம் வளர மொழிவளர வேண்டும், எங்கள்
இனியதமிழ் மொழிவளர்த்த கலைகள் மீண்டும்
பனந்தருப்போல் வளர்ந்தோங்க வேண்டும், அந்தப்
பனைகொடுக்குங் கொடைக்கும்மேற் பயனைநல்கும்
மனம் வளரப் புளகமுறச் செய்யும் மாண்பார்
மரபுநெறி பிறழாத கலைச்செல் வத்தைத்
தினந்தினம் யாம் அனுபவிக்க வேண்டும்; இந்தத்
திருப்பதியில் அச்செல்வந் திரள்க யாண்டும்.

-வேறு-

மதிகொடுக்குங் கொடையுமொரு பட்சமட்டே,
மழைகொடுக்குங் கொடையுமொரு பருவமட்டே...
விதிகொடுக்குங் கொடையுமொரு பிறவிமட்டே,
வினைகொடுக்குங் கொடையுமொரு ஆன்மமட்டே
சுதி கொடுக்குங் கொடையுமொரு தந்திமட்டே,
சுனைகொடுக்குங் கொடையுமொரு சாரல்மட்டே...
கதிகொடுக்குங் கிளிநொச்சி மாதாநல்குங்
கலைக்கொடையைக் கணித்துரைக்கக் கவிஞனுண்டோ.?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது நாடகங்கள்

கலையரசு சொர்ணலிங்கம்,

(மானிப்பாய்)

"கலையே தெய்வம்" "தெய்வமே கலை" "கலையில்லாமல் தெய்வமில்லை" "தெய்வமில்லாமல் கலையில்லை" என்றெல்லாம் சொல்லுகிறார்கள். கலை தெய்வத்திற்குச் சமமானதென்பதே அதன் கருத்து. இறைவன் முன் எத்தகைய பக்தியுடனும் பணிவுடனும் போகின்றோமோ அத்தகைய பக்தியுடனும் பணிவுடனும் கலையையும் நாடவேண்டும். இயற்கையாகக் கலை வல்லமை கிடைத்திருப்பது மிகச் சிலருக்கே. அது இறைவனால் அருளப்படும் கொடை. ஒருவருக்கு நல்ல சரீரம், இன்னொருவருக்கு நடனத்திற்கேற்ற உடலமைப்பு முகபாவம் இன்னும் சிலருக்கு நன்றாக நடிப்பதற்கேற்ற தோற்றமும் ஞானமும் இயற்கையாகவே கிடைத்திருக்கும். அவரவர் தமக்குக் கிடைத்திருக்கும் வல்லமைகளைத் தக்கபடி விருத்தி செய்து வளர்த்து மக்கள் பார்த்து ரசித்து நல்ல சிந்தனைகளை கொள்ளும்படி செய்து காட்டுவதும் தாம் அறிந்த கலைகளை மற்றவர்களும் அறியும்படி செய்வதும் இறைவனுக்குச் செய்யும் பெரும் பணியாகும் அப்படியானவர்கள் மீது இறைவன் அன்புகொள்ளுவார். அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் சுகவாழ்வையும் கொடுத்து உதவுவார்.

நாடகம் சகல நுண்கலைகளும் ஒன்று சேர்ந்த மாபெரும் கலை. இந்த மாபெரும் கலையை நாடுபவர்கள் எவ்வளவு அதிக பக்தியுடன் அதை நாடவேண்டும். ஆனால் நாடகம் இன்று நமது நாட்டில் படும் பாட்டைச் சொல்லவும் வேண்டுமா? 1937ல் முதன்முதல் சமூகப்படம் (சிந்தாமணி) திரையிடப்பட்டது. அதன் வெற்றியைக்கண்டு பல சமூகப்படங்கள் தொடர்ந்து வந்தன. ஆரம்ப காலத்தில் இப்படங்கள் நல்ல கருத்தும் கனிவும் உள்ளனவாயிருந்தன. பின்பு பட முதலாளிகள், பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள், தங்கள் படங்களில் ஆபாச-அநாகரிக-தகாத-நடக்காத-நடக்க முடியாத-நமது கலாச்சார பண்பாட்டிற்கு மாறான-சம்பவங்களைப்புகுத்தி படங்களைத் தயாரித்து வந்தார்கள், அத்தகைய சம்பவங்களையே பார்க்க மக்களும் விரும்பியதால் இப்படியான செயல்களே படங்களில் இடம்பெற்று வந்தன. யாராவது மேலே கூறியிருப்பவைகளைப் போலன்றி இயற்கையாகவும் ஒழுக்கமாகவும் தயாரிக்கும் படங்கள் வெகுநாட்கள் நடைபெறுவதில்லை. இப்படியான படங்களைப் பார்த்து நம்மவர்களும் சமூக நாடகங்களை நடாத்த ஆரம்பித்தார்கள். இவர்களும் நாடகங்களைச் சீராகத் தயாரித்து ஒழுங்காகவும் ஒழுக்கமாகவும் நடாத்தி வந்தார்கள். சமூக நாடகங்களை நடாத்த அதிக செலவு வேண்டியதில்லை. இதன் காரணமாக சமூக நாடகங்கள் அதிகரிக்கத் தொடங்கின. சமூக முன்னேற்ற நாடகங்கள் என்ற பெயரிலே அரசியற் கட்சிக்கு பிரசாரமாகவும், தமிழனின் கலாச்சாரம் பண்பாட்டிற்கு மாறாகவும் சம்பவங்களைப் புகுத்தி நடித்து வந்தார்கள். நான் பார்த்த நாடகம் ஒன்றைப்பற்றி இங்கே குறிப்பிடுகின்றேன். ஒருவன் பீ. ஏ. பரீட்சையில் சித்தி பெற்றுவிட்டான். காற்சட்டை முதலியன அணிந்திருக்கிறான். ஒரு பெண்ணைக் காதலிக்கிறான் வைதிகமான தந்தை திருநீறு அணிந்தவர் ஒற்றைப் பட்டுவேட்டி கட்டியிருக்கிறார். அவருக்கு அந்தப் பெண்ணை மகன் விவாகஞ்செய்வது பிடிக்கவில்லை. அதைத் தடுப்பதற்காகச் சில காரணங்களைச் சொல்ல முயலுகிறார். திடீரென மகனுக்குக் கோபம் வருகிறது. "உனக்கென்ன தெரியும் நீ படிப்பில்லாத ஒரு தோட்ட வேலையாள். நான் பீ. ஏ. பட்டதாரி. படித்தவன். உன்னைப்போல வீட்டிலடைபட்டிருந்தவனல்ல. உலகைஅறிந்தவன். எனக்குப்புத்தி சொல்ல வராதே. இன்னும் இவை போன்றவைகளை சிவாஜி கணேசனைப் போல உரத்துக் குளறினான். அவனுடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் பலத்த கரகோசம் கிடைத்தது. இப்படியே திரைப்படங்களில் வரவர ஆபாசங்களும் பண்பாடற்ற வசனங்களும் அதிகரித்தே வந்தன. நமது இளைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளைப் பார்க்கத் தவறுவதில்லை. இளம் உள்ளங்களுக்கு அவைகளைப் பார்க்க விருப்பமாயிருப்பது இயற்கையானதுதான். ஆனால் இவைகளைப் பார்த்து அவைகளைப் போல நடிக்க முன்வருகிறார்கள். எந்தப்படத்திலும் சிறந்த அம்சங்களில்லாமலில்லை. ஆனால் அந்த அம்சங்களையெல்லாம் நழுவ விட்டு தகாதவற்றையே உபயோகித்து வருகிறார்கள். காதல் கொள்ளுவதென்றால் ஒரு பெண்ணை ஒரு ஆண் துரத்தித்திரிவது அல்லது ஒரு பூங்காவில் ஆணும் பெண்ணும் சேர்ந்து நடனமாட வேண்டுமென்பதே அவர்களின் கருத்துப்போலிருக்கிறது. இவையெல்லாம் பகிரங்கமான இடங்களில் நடைபெற்றால் இவைகளைக் காண்பவர் கூச்சலிட்டுக் கேலி செய்யமாட்டார்களா? அன்றியும் மிகக் கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டும் காட்சிகளை நடித்துக் காட்டுவதையும் பார்த்துமிருக்கிறேன் இவைகளைக் கண்டித்துமிருக்கிறேன். அதனாற் பலரின் கோபத்திற்குமாளாயிருக்கிறேன்.

இவைகள் மத்தியில் ஆங்காங்கு சில மன்றங்களும் பாடசாலைகளும் நாடகக் கலையின் மகத்துவத்தையுணர்ந்து கருத்தும் கனிவும் கொண்ட நாடகங்களை ஆபாசமோ அசம்பாவித்தனங்களில்லாமல் தக்கபடி முறையாக ஒத்திகை செய்து நல்ல சிந்தனைகளை உண்டுபண்ணக்கூடியளவிற்கு நடித்து வருவது நாடக அபிமானிகளுக்கு எவ்வளவு திருப்தியாயிருக்கிறது. இவர்கள் மூலமாக தமிழ் நாடகங்கள் விருத்தியடைந்து நம்மவர்களால் மாத்திரமன்றி அந்நியர்களாலும் மதிக்கப்பட்டுவந்து நமது நாட்டிற்கே புகழ் கிட்டச்செய்யுமென்பதை எதிர்பார்க்கலாம்.

★


- FOR DEPENDABILITY
- FOR SATISFACTION
- FOR EFFICIENCY

BU

**USHA** — *Sewing Machine*
**USHA** — *"3 Stor" Refrigirator (Compressor Model)*
**USHA** — *Ceiling Fans*

*Contact :*

**USHA SHOP**
KANDY ROAD,
LINOCHCH.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவலரும் பாரதியும்

**கலாநிதி க. கைலாசபதி**
(விரிவுரையாளர், இலங்கைப்பல்கலைக் கழகம்)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளையின் நூற்றுண்டு நிறைவுவிழா யாழ்ப்பாணத்திலே கொண்டாடப்பட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி நிறுவியவரும், சிறந்த பத்திரிகாசிரியரும், சமூக சீர்திருத்தவாதியுமாய்த் திகழ்ந்த துரையப்பாபிள்ளை (1872—1929) கவிஞராகவும் விளங்கினர். இந்நூற்ருண்டின் முதற்காலில் கவிதைகள் இயற்றிவந்த பிள்ளையவர்கள், உரை நடையிலும் கவிதையையே தமது பிரதான கருத்து வெளிப்பாட்டுச் சாதனமாய்க் கொண்டார் எனலாம்.

ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றை நோக்கும்பொழுது, துரையப்பாபிள்ளையே சமூக சீர்திருத்தச் சிந்தனைகளை முதன் முதலாகக் கவிதையில் அமைத்தார் என்று கூறத்தோன்றுகிறது. (ஏறத்தாழ இவர் காலத்தவரான தி. த. சரவணமுத்துப் பிள்ளை, தத்தைவிடு தூது என்ற பிரபந்தத்திலே பெண்கல்வி சம்பந்தமாய்ச் சிற்சில புதுமைக் கருத்துகள் கூறியுள்ளனரெனினும் துரையப்பாபிள்ளையைப் போல முனைப்பான சீர்திருத்தவாதக் கவிஞராய்த் திகழ்ந்தார் அல்லர். அதுமட்டுமல்லாது அவர் உரைநடையையே சிறப்பாகக் கையாண்டார் என்றும் கூறலாம்) நவீன சிந்தனைகளைக் கவிதையிற் பாய்ச்சியதிலும் துரையப்பாபிள்ளையவர்களுக்குப் பெரும் பங்குண்டு.

தமிழிலக்கிய மறுமலர்ச்சியின் தலைமகனும் சுப்பிரமணிய பாரதியும் சற்றேறக் குறைய பிள்ளையவர்கள் காலத்தவரே. (1882—1921) பாரதி பத்தாண்டுகளுக்குப்பின் பிறந்து எட்டாண்டுகளுக்கு முன்னரே இறந்துவிடுகிருன். ஆயினும் இருவரும் இந் நூற்ருண்டின் முதல் தஸாப்தத்தில் முழுமூச்சாகக் கவிதைகள் இயற்றிக்கொண்டிருந்தனர். பாரதி பெருங் கவிஞன்; யுகக் கவிஞன். கலையுணர்வில் பிள்ளையினும் பன்மடங்கு மேம்பட்டவன். எனினும் கருத்துக்களைப் பொறுத்தளவில் பற்பல ஒற்றுமைகள் இருவர் கவிதைகளிலும் காணப்படுகின்றன. இவ்வொற்றுமைகள் விதந்து குறிப்பிடத்தக்கனவாயும் உள்ளன. இவற்றில் இரண்டொன்றை சுட்டிச்சொல்வதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

உலகமளாவிய ஆன்மநேயப்பாடு கொண்டிருந்த பாரதி தமிழ், தமிழகம், தமிழினம் என்றிவை பற்றியும் உணர்ச்சி பூர்வமாகச் சிற்சில கவிதைகள் பாடியிருக்கிருன் என்பது பலருக்கும் தெரிந்ததே. ''ஆதிசிவன் பெற்றுவிட்டான்'' என்று தொடங்கும் தமிழ்த்தாய் பாடலில், தமிழன்னை தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல் கூறப்படுகிறது. அதே வேளையில் தமிழ் மக்கள் தன்னைப் புறக்கணிப்பதாயும் தமிழ்த்தாய் கவலைப்படுகின்ருள்.

மூன்று குலத்தமிழ் மன்னர்—என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளி னுள்ளே—உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்.

என்று தமிழன்னை கூறுவதமைந்த அப்பாடலிலேயே,

சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள்' யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்னுமடிகள் வருகின்றன. ஏறத்தாழ இதே தொனியிலே இரு பாடல்களைப் பாவலர் பாடியுள்ளார். ''தமிழ்ப் பாஷையின் மகத்துவம், தமிழ் மாதின் பிரலாபம்'' என்னும் இரு கீர்த்தனைகள் பாரதியின் கவிப்பொருளையே எடுத்துரைப்பனவாயுள்ளன,

என்னைக் கைவிடுவது ஏற்குமோ உமக்கென
இயம்புவர் யான் பெற்ற இளைஞர்களே

என்னும் பல்லவத்திற்கு அனுபல்லவமாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்ஞெருகாலம் முழுவனு கூலம்
முத்தமிழெனக்கது மணக் கோலம்
பின்னவகாலம் பிறந்தலங் கோலம்
பெருகிடச் செய்ததிக் கலி காலம்

என்று தொடங்கிச் செல்லும் பகுதி அமைந்துள்ளது. இக்கீர்த்தனைகள் பாவலரவர்கள் 1901-ம் வருடம் வெளியிட்ட இதோபதேச கீதரசமஞ்சரி என்னும் நூலில் இடம்பெற்றவை. அக் காலத்திலே சென்னைக் கிறித்துவக் கல்லூரியில், தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர், 1870—1903) இந்நூலுக்குச் சாற்றுகவி ஒன்று எழுதியுள்ளார்.

கால அடைவில் நோக்குவோர்க்கு இப்பாடல்கள் பாரதியார் பாடல்களுக்கு முற்பட்டவை என்பது எளிதிற் புலனுகும். இக்காலப் பகுதியில் (1898—1902) பாரதி காசியில் வசித்தார். கவிதா வாழ்க்கை தொடங்கவில்லை. இதை எண்ணும்போது பிள்ளையவர்களின் ஆற்றலையும் பெருமையையும் வியக்காமல் இருக்கவியலாது.

பாரதியின் "ஸ்வசரிதை" 1910-ல் வெளிவந்த மாதாமணிவாசகம் என்னும் நூலில் இடம்பெற்றது. இப்பாடலில் கவிஞன் தனது இளமைப் பிராயத்திலே பெற்ற 'மண்படு கல்வியை' அதாவது ஆங்கிலமுறைக் கல்வியைப் பலவாறு கண்டிக்கிருர்.

கணிதம் பன்னிரண்டாண்டு பயில்வர் பின்
கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்
அணிசெய் காவியம் ஆயிரங் கற்கினும்
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்
வணிக மும்பொருள் நூலும் பிதற்றுவார்
வாழு நாட்டிற் பொருள்கெடல் கேட்டிலார்
துணியு. மாயிரஞ் சாத்திர நாமங்கள்
சொல்லுவாரெட் டுணைப்பயன் கண்டிலார்

என்றெல்லாம் பலபட விரித்துக் கூறினராயிருந்தபோதும் சர்வசமய சமரசக் கீர்த்தனைகள் பாடியவர். துரையப்பாபிள்ளையின் கீதரச மஞ்சரி முந்திய நூலின் மரபு வழி வருவதே. ஆயினும் இருபதாம் நூற்ருண்டில் வாழ்ந்து பாடிய பாவலரவர்கள், பத்துலகின் வைகறையைக் கண்டவராதலின், அவ்வுணர்வையும் சேர்த்துத் தமது கவிதைகளை ஆக்கியுள்ளார். அந்த வகையில் நவயுகக் கவிஞன் பாரதியுடன் நுணுகி ஒப்பு நோக்கிக் கற்கப்படவேண்டியவர்.



தேமதுரத் தமிழோசை உலக மெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப்பிரதேசத்து வரலாறும் பண்பாடும்

கலாநிதி கா. இந்திரபாலா,
*(விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம்)*

பிரதேச வரலாற்றுராய்ச்சி நம் நாட்டிலே இன்னும் அபிவிருத்தியடையாத ஒரு துறையாகும். இதனுற் தேசிய வரலாறுகூட முழுமையான வகையிலே அபிவிருத்தியடைய முடியாதுள்ளது. வரலாறு நன்கு அறியப்படாத ஈழத்துப் பிரதேசங்களுள் ஒன்று வன்னிப் பகுதியாகும். இதிலே சிறப்பாகத் தமிழ் வன்னியைப் பொறுத்த மட்டிலே பத்தொன்பதாம் நூற்றுண்டிலும் இந்நூற்றுண்டின் ஆரம்பத்திலும் ஒருசில அறிஞர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்குப் பின் முறைப்படியாக வரலாற்றை ஆராய்வதற்கு அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

வன்னிப்பகுதியின் வரலாற்றையும் பண்பாட்டையும் ஆராய்வதற்கு மூலாதார நூல்கள் மிகக் குறைவாகவே கிடைக்கின்றன. ஆனுல் இப்பிரதேசமோ மிகவும் நீண்ட ஒரு வரலாற்றை உடையது. ஆகவே, இதன் வரலாற்றையும் பண்பாட்டையும் நம்பகமான வகையிலே அறிவதற்கு ஒருவழிதான் உண்டு. அதாவது இங்கு முறைப்படியாகத் தொல்பொருள், ஆராய்ச்சி நடாத்தினுல் ஆரம்ப காலத்திலிருந்து பிற்பட்ட காலப் பகுதிகள் வரையுள்ள வரலாற்றைப் பற்றியும் பண்பாட்டைப் பற்றியும் அரிய தகவல்கள் பலவற்றைப் பெற முடியும்.

வன்னிப் பகுதியிலே கற்காலத்திலிருந்தே மனிதர் வாழ்ந்து வந்துள்ளனர். உதாரணமாக, மாங்குளத்தில் கற்கால மனிதர் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இதனுல் இங்கு வெகு விரைவிலே அரசாங்கத் தொல்பொருள் ஆய்வுத் திணைக்களகத்தினர் அகழ்வாராய்ச்சி நடத்தி, இங்கு கற்காலத்திலே வாழ்ந்த மக்களுடைய பண்பாட்டைப் பற்றிய விரிவான தகவல்களைப் பெறவிருக்கின்றனர்.

வரலாற்றுரம்ப காலத்திலே இங்கு நாகரிக வளர்ச்சி ஏற்படத்தொடங்கிச் சிற்றரசுகள் கூடத் தோன்றியிருந்தன. இதனை அறிந்துகொள்ள நமக்கு நம்பகமான சாதனச் சான்றுகள் கிடைத்துள்ளன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாக இங்கு கிடைக்கும் பல குகைக் கல்வெட்டுக்களிலே இச்சான்றுகள் காணப்படுகின்றன. இப்பிரதேசத்திலே ஆதிக்கம் பெற்றிருந்த பல நிலக் கிழார்களும் நாகன், உத்தியன் போன்ற சிற்றரசர்களும்; அநுரதி போன்ற இளவரசியரும், விசாகன் போன்ற வணிகர்களும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்துக் கல்வெட்டுக்களிலே குறிப்பிடப்பட்டுள்ளனர். பௌத்த மதம் அக்காலத்திலே இங்கு பரவியதையும் இவற்றுல் அறியலாம்.

இதன்பின் அநுராதபுர இராச்சியத்தின் ஆதிக்கம் பரவத் தொடங்கி வன்னிச் சிற்றரசுகள் மறைந்து போயின. இந்த இடைக்காலத்திலே இங்கு நிலவிய பண்பாட்டையும் இங்கு நிகழ்ந்த சம்பவங்களையும் அறிவதற்குத் தொல்பொருட்களும் சாசனங்களுமே உதவும். அப்படியான சாசனங்களும், தொல்பொருட்களும் ஆராயப்படாது ஆங்காங்கு மறைந்து கிடக்கின்றன. இவற்றைக் கற்றறிந்தோர் ஆராய்வதற்கு இப்பிரதேசத்து மக்கள் உதவவேண்டும்.

ஏறத்தாழப் பன்னிரண்டாம் நூற்றுண்டின் இறுதிவரை வன்னியிலே (அநுராதபுர, பொலநறுவை) மன்னர்களுடைய ஆட்சி நிலவியது. பின்னர் பதின்மூன்றும் நூற்றுண்டிலே திரும்பவும் சிற்றரசுகள் தோன்றுவதற்கான சூழ்நிலை உருவாகியது. பொலநறுவை வீழ்ச்சியுற்றுச் சிங்கள வம்சத்தவர் தென்மேற்கிலங்கையை நோக்கிச் செல்ல, வன்னிப் பிரதேசத்திலே மாகமன்னனுடைய அதிகாரிகள், சிறப்பாக வன்னியர் என்ற படைத் தலைவர்களும் சோழகங்கன் (குளக்கோட்டன்) போன்

ருரும் ஆங்காங்கு சிற்றரசுகளை அமைத்து ஆளத்தொடங்கினர். இவை பெரும்பாலும் யாழ்ப்பாணத்து அரசர்களுக்கு அடங்கியவையாகவே பின்னர் காணப்பட்டன.

வன்னியர் வரலாற்றை அறிவதற்கு இலக்கிய ஆதாரங்கள் சில இருப்பினும், நம்பகமான தகவல்களைக் கல்வெட்டுக்கள் மூலமும் பிற தொல்பொருட்கள் மூலமுமே பெற வேண்டும். சில வன்னியருடைய சாசனங்கள் இதுவரை வெளிப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. எனினும் தொடர்ச்சியான ஒரு வரலாற்றை எழுதுவதற்கு இவை போதா.

பதின்மூன்றும் நூற்றாண்டிலே தோன்றிய சிற்றரசுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை நிலைத்து இருந்தன. போர்த்துக்கீச, ஒல்லாந்த, ஆதிக்கத்தின்போதுகூட இவை ஓரளவுக்கு அடக்கப்பட்டிருந்தாலும், அழிக்கப்படாதியங்கின. இக் காலப் பகுதியிலே சில வீரம் மிகுந்த வன்னித் தலைவர்களும் வன்னிச்சியரும் இங்கு அதிகாரம் செலுத்தினர். இவர்களைப்பற்றிய மரபுக் கதைகள் பல உள்ளன. அவற்றையும் சேகரித்து விஞ்ஞான முறைப்படி ஆராய்வதன் மூலம் வன்னியின் வரலாற்றையும் பண்பாட்டையும் முறைப்படி எழுதிக் கொள்ளமுடியும்.

★

*For all your requirements in :-*

**Accident repair work**
**Lorry body building**
**Trailer Manufacture**
**The latest in steel and timber**
**Luxury Furniture**
**at Competition rates**

*CONTACT :*

**UPALI ASSOCIATES**

**65, KANDY ROAD,**
**KILINOCHCHI.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்து

## அதன் பண்பும் பணியும் பற்றிய ஒரு வரலாற்று நோக்கு


**கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி**

*(இலங்கைப் பல்கலைக் கழக வித்தியோதயக் களத் தமிழ் திராவிடவியற்றுறை முதல்வர்)*


இன்றைய உலக வாழ்க்கை அமைந்துள்ள முறையினை நோக்கும் பொழுது, பேச்சிலும் (உரையாடலிலும்) பார்க்க, எழுத்து வாசிப்பு ஆகியனவற்றின் மூலமாகவே எம்மைச் சுற்றியுள்ளவர்களுடன் நாம் அதிக தொடர்புகொள்ளக் கூடியதாகவிருக்கின்றது, என்னும் உண்மை தெரியவரும். பேச்சுப் பரிமாறலின் மூலம் அறிவதைக் காட்டிலும் எழுத்தின் மூலமே நாம் அதிகமானவற்றை அறிகின்றோம். இவ்விடத்தில், வாசிப்பு என்பது எழுத்தறிவினைத் தன் வயப்படுத்துவதாகிய ஒரு திறன் என்ற ஒரு மிகக் குறிகிய வரைவிலக்கணத்தை வகுத்துக்கொள்ளலாம். எனவேதான் மேற்குறிப்பிட்ட எழுத்து, வாசிப்புடன், அளவறிந்து செயற்படுவதற்கு உதவுவதாகிய கணிதத்தையும் (கணக்கிடுதல் என்னும் சொற்றொடரை நோக்குக) சேர்த்து இவை மூன்றுமே ஆரம்பக் கல்வியின் அடிப்படை என்கின்றோம். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

இந்த அடிப்படைக் கல்வி இல்லையெனில் அதாவது (ஒருவனுக்கு) எழுத, வாசிக்க, கணக்குப் பார்க்கத் தெரியவில்லையெனில், (அவனால்) இன்றைய சமுதாயத்திலே சுலபமான முறையில் வாழ்க்கை நடாத்த முடியாது. குடும்ப உறவு முதல் அரச உறவுவரை எல்லாவற்றிலும் இவ்வடிப்படைக் கல்வி தேவைப்படுகின்றது.

முற்காலத்திலே இத்தகைய கல்வி தேவைப்படவில்லை. அக் காலத்திலே உலகில் நிலவிய சமுதாய அமைப்பு, பொருளாதார அமைப்பு, அதிகார அமைப்புக் காரணமாக இத்தகைய பொதுப்படையான (சகலருக்கும் பொதுவான) கல்வி தேவைப்படவில்லை. பிறப்பால் தொழில் நிர்ணயிக்கப்பட்ட சூழ்நிலையில், பிறப்பால் இயங்குநெறி (போக்குவரத்து, பயணம் முதலியன) கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் ''வெகு சனக் கல்வி'' என்பது தேவையற்ற சிந்திக்கப்பெறாத ஒரு கோட்பாடாகவே இருந்தது. சில சாதியினர் தாம் வாழ்ந்த இடத்தைவிட்டு, (சேரியை விட்டு)ப் பிறபகுதிகளுக்கு (ஒரோவிடங்களில் தாம் வாழ்ந்த கிராமத்தின் பிற தெருக்களுக்குக்கூட)ச் செல்ல முடியாத நிலையிலிருந்தது.

இத்தகைய சமுதாய அமைப்பில் எழுத்து வாசிப்பு என்பன சமூக தனிமனித தொழிற்பாட்டுக்கு முக்கியமானவையாகவிருக்கவில்லை. அந்த அமைப்பில் இவை ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கே தேவையாக விருந்தது. எனவே கல்வியும் குறிப்பிட்ட குழுவைச்சார்ந்ததாகவே இருந்தது.

அக்காலத்திலே தமிழ் நாட்டில் எழுத்து, பெரும்பாலும் ஏட்டிலும், கல்லிலும் தான் பொறிக்கப்பட்டது. இவை பரவலாகப் பயன்படுத்தக் கூடிய பொருட்களன்று. கல்லில் அரச ஆணைகளும் பொதுப் பிரகடனங்களும் பொர்றிக்கப் பட்டன. எழுத்திலே இருக்கவேண்டிய மற்றையன ஏட்டிலே பொறிக்கப்பட்டன. இன்றைய உலகிலே எழுத்தும் வாசிப்பும் பெறும் இடத்தினை அன்றைய அமைப்பிலே அவை பெறவில்லை.

மேலும், அக் காலத்திலே, எழுத்திலே பொறிக்கப்பட வேண்டிய விடயங்களின் தொகை இன்று எழுத்திற் பொறிக்கப்பட வேண்டியனவற்றின் தொகையிலும் பார்க்க மிக மிகக் குறைவாகவே இருந்தது. அரச உறவுகள், ஆட்சி, ஆவணங்கள் என்பனவற்றைவிட்டு நோக்கினால், (அங்கும் மிக முக்கியமான தேவைகளுக்கே பயன்படுத்தப்பட்டது.) பரம்பரை பரம்பரையாக வரும் அநுபவ அறிவினை அதனைப் பயிலும் குழுவினருக்கு எடுத்துக் கூறுவதற்கான வாகடங்கள் போன்றவையும் ஒரேதரப்

162620

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட சமுதாய அந்தஸ்துடையோர் ஒருங்குகூடி உலக, மத விளக்கம் பெறுவதற்கான இலக்கண, இலக்கியங்கள் (இவற்றிலும் புராதன இலக்கியங்களுக்கு விளக்கம் கொடுப்பதே முக்கிய இடம் பெற்றது) போன்றவையுமே எழுத்திலே பொறிக்கப்பட்டன.

அன்றைய கல்வி முறையில் ''கேள்வி''யே (கேட்டறிதல்) முக்கிய இடம் பெற்றது. வாசிப்புக்கு அந்த அமைப்பில் முக்கிய இடம் இல்லை. இதனாலேயே கல்வி பற்றிக் கூறும்பொழுது ''கல்வி கேள்வி'' என்ற சொற்றொடரை வழங்கினர்.

கல்வியின் அதாவது அறிவுப் பயிற்சியின் பரவல், கேள்வி முறையாக - செவி வழியாகவே - சென்றது. இத்தகைய முறையிற் கல்வி பெறுவோர் தொகை மிகக் குறைவாகவே இருக்கும், என்பதை வலியுறுத்திக் கூறவேண்டிய அவசியமேயில்லை. இத்தகைய சூழ்நிலையில் தோன்றும் ஆக்கங்களும், அதனைக் கேட்டறிவோர் தொகையும், கேட்டறிந்தோர் வழியாகப் பயன்பெற்றோர் தொகையும் முழுச் சனத்தொகையிற் மிகக் குறைவான வீதமாகவே இருந்தது.

இதே பண்பினை இன்னொரு வகையிலும் எடுத்துக் கூறலாம். அதாவது கல்வியைப் பயில்வோர் தொகை மிகக் குறைவாகவே இருந்தது. அத்துடன் பயில்வோரும் ஆர்வலரும் சமுதாய நிலையில் ஒரே தன்மையினராகவே இருந்தனர். இப் பண்பு பல்லாண்டு காலம் நிலவிவந்தது.

இதன் காரணமாக எழுதப்படும் விடயங்களிலும் அவ்விடயங்களை நோக்கும் முறையிலும் பெரு மாற்றங்கள் ஏற்படாதிருந்தன.

ஆனால் இன்னொரு நிலைமை முற்றிலும் மாறிவிட்டது.

முன்னர் இருந்தது போன்று இப்பொழுது சாதி மனிதனின் தொழில், இயங்குநெறி ஆதியனவற்றை நிர்ணயிப்பதில்லை. அரசாங்கத்தின் கோட்பாடும் ''மனுநீதி வழுவாது'' அரசுபுரிவதன்று. தனி மனிதனின் வளர்ச்சிக்கு வேண்டிய சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவது இன்றைய அரசாங்கத்தின் பணியாகவுள்ளது. சமுதாயத்திலுள்ள யாவருக்கும் சந்தர்ப்பம் வழங்குவது சட்ட அடிப்படையாகிவிட்டது. சதுர்வர்ணாசிரமதர்ம பரிபாலனத்திலிருந்து சட்ட சமத்துவம் என்ற நிலைக்கு வந்துவிட்டோம்.

இச் சூழ்நிலையில் கல்வி கற்றல் மக்களினது அடிப்படை உரிமையாகிறது. இதனால் கல்வியின் பண்பும், பணியும் வேறாகுகின்றது.

இதே வேளையில், அறிவுத்துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. அறிவுத்துறை வளர்ச்சியால் ஏற்பட்ட கண்டுபிடிப்புக்கள் உலக அமைப்பினையே மாற்றிவிட்டன. சாதியடிப்படையில் தெருவாரியாகப் பிரிந்து வாழ்ந்தனரெனினும் இன்று அறிவு அடிப்படையில் உலகமே ஒன்றாகி வருவதைக் காணலாம். இச் சூழ் நிலையில் எழுத்தும் வாசிப்புமே உலகத்தை அறிந்து கொள்வதற்கான வாயில்களாகின்றன.

உலக வளர்ச்சியின் போக்கு அறிய வேண்டியனவற்றின் அளவிலும், அறியும் முறையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. வாழ்க்கை விஞ்ஞான மயப்படுத்தப்படுகின்றது. அச்சியந்திர முறை எழுத்து, வாசிப்புக்குப் புதிய பரிமாணம் ஒன்றினை ஏற்படுத்திற்று. எழுத்து உண்மையான பொதுமை நிலையை எய்துவதற்கு அச்சியந்திரமே காரணமாயிற்று.

நாட்டின் பொது மாற்றங்கள் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தின. கல்வி மாற்றமும் எம நாட்டைப் பொறுத்த வரையில் இரு நிலைகளில் ஏற்பட்டது. முதலில் ஆங்கில மொழிவழிக் கல்வியாகவும் பின்னர் சுதேச மொழிவழிக் கல்வியாகவும் இவ்வளர்ச்சி ஏற்பட்டது. சமுகப் பொதுவான கல்வியாகவிருந்தும் அது ஆங்கில மொழி மூலமே முன்னர் பயிற்றப்பட்டதால் மக்களிடையே பெரும் மாற்றத்தை (தாக்கத்தை) ஏற்படுத்தவில்லை. தமிழ்மொழி மூலம் கல்வி பயிற்றப்படத் தொடங்கியபொழுதுதான் நியாயமான அளவு தாக்கம் ஏற்பட்டது. இம்மாற்றம் இன்னும் எல்லோரையும் எழுத, வாசிக்கத் தெரிந்தவர்களாக மாற்றிவிடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குக் காரணம் வறுமை முதலியன. கல்வி வளர்ப்பும் பொருளாதார வசதியும் இணையும்பொழுதுதான் பூரண மாற்றம் ஏற்படும். ஆயினும் இவ்வளவில் ஏற்பட்டுள்ள மாற்றமே முற்றிலும் புது நெறிகளை வெளிக்கொணருவதற்குப் போதியதாயிருக்கின்றது.

''தமிழ்மொழி மூலம் கல்வி'' எனும் மாற்றத்தால் பல சமூக, மொழிநிலை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதுகால வரை கல்வி பெருதோர் கல்வி பெற்றனர். அக்கல்வி கொண்டு உயர்நிலை எய்தினர்; எய்துகின்றனர். இதனுலே பல சுவர்கள் இடிந்து விழுந்துள்ளன.

மொழி நிலையிலே ஏற்பட்ட மாற்றமே இங்கு எமக்கு முக்கியமானதாகும். தமிழில் பல புதிய விடயங்கள் எழுதப்படலாயின. அறிவியல் விடயங்கள் அரசியல் விடயங்கள் அன்ருட வாழ்க்கை பற்றிய விடயங்கள் எனப் பல துறைகளில் தமிழ் பயிலப்படத் தொடங்கிற்று.

இந் நிலைமை மாறுவதற்கு முன்னர் தமிழ் மொழி பேசும் விடயங்கள் பற்றிய ஒரு வரையறை இருந்தது. இலக்கியம், இலக்கணம், தத்துவம் மதநெறி என்ற பெரு வட்டத்துள் தமிழின் இயக்குநெறி வரைப்படுத்தப்பட்டது. தமிழிலுள்ள அறிவியற் பாரம்பரியம் ஆய்வுநெறிப் பாரம்பரியம் முதலியன பற்றிய உணர்வு அதிகம் காணப்படவில்லை. புதிய சூழ்நிலையில் தமிழைப்பன்முகப்பட்ட பணிகளுக்கு பயன்படுத்தவேண்டியதாயிற்று. இதனுல்தமிழின் எழுத்து மரபு மாறத் தொடங்கிற்று. இலக்கியம், இலக்கணம், மதநெறி, தத்துவம் அல்லாத வேறு பல துறைகளிலே தமிழ் பயன்படுத்தப்படலாயிற்று. தமிழில் எழுதப்படுவனவற்றின் தொகை அதிகரித்தது. தமிழ் எழுத்துக்களை வாசிப்போர் தொகையும் அதிகரித்துள்ளது.

வாசிப்போர் தொகையிலும் எழுதப்படும் விடயங்களிலும் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது, இந்த மாற்றம் தமிழிற் புதிய பல விடயங்களைப் புதிய பல வாசகர்களுக்கு அளிக்க உதவிற்று.

இம்மாற்றம் ஐரோப்பிய மொழிகளிலே படிப்படியாகவே ஏற்பட்டது. இந்திய மொழிகளில் இம் மாற்றம் சற்றுத் திடீரெனதாகவே இருந்தது. இதனுல் பல பிரச்சனைகள் ஏற்பட்டன.

முதலாவது முன்னர் வழக்கிலிருந்து இலக்கிய உருவங்களும் இலக்கியப் பொருளும் கைவிடப்பட்டுப் புதிய உருவும் பொருளும் இடம் பெற்றன. இலக்கியக் கோட்பாடு மாறிற்று. இதனுல் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் தமிழைப் பொறுத் வரையிலே இன்னும் பூரணமாக முடிவு பெறவில்லை எனலாம்.

எழுத்து வாசிப்பறிவு, கூடக் கூட இதுகாலவரை தமிழ் மொழி பயன்படுத்தப்படாத பல விடயங்களைத் தமிழ் மொழி மூலம் செய்யவேண்டியதாகின்றது. தவகல் முறையில் தரப்படும் பல விடயங்கள் விளம்பரங்கள் முதலியன இத்துறையிலேமுக்கிய இடம் பெறுகின்றன. இவை இரண்டும் பெரும்பாலும் பத்திரிகைகள் மூலமாகவே வெளிவருகின்றன. வாஞெலி போன்ற புதிய சாதனங்களின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இத்துறைகளிலே கையாளப்படும் மொழிநடை புதிய தேவைகளுக்கியையக் கையாளப்படுகின்றது. பத்திரிகை விளம்பரங்கள் ஆதியனவற்றில் புதிய எழுத்து வகைகள் கையாளப்படுவது அதிகரிக்க தமிழில் ''எழுத்து வகைகள் அதிகரிப்பதை நாம் காணலாம். இப்புதிய வகைகளை எமது மரபுவழிவரும் ''இலக்கிய'' நெறிகள்'' கொண்டு விளங்க முனையும் பொழுதுதான், புதிய வகைகள் யாவும் தமிழின் தரத்தைக் குறைப்பனவாகச் சிலராற் கொள்ளப்படுகின்றன. கவர்ச்சிகரமான பத்திரிகை நடை, வசீகரமான விளம்பர முறைமை ஆதியன காலத்தின் தேவைக்கேற்ப மொழியைப் பயன்படுத்தும் முயற்சிகளாகும்.

புதிய வாசகர்களும், புதிய எழுத்து முறைகளும் தோன்றும் பொழுது புதிய ''ருசி'' முறைமையும் - அதாவது ரசிகத் தன்மையும் ஏற்படுவது வழக்கமே.

மொழியின் பிரயோக வளர்ச்சியை ஆராயும் அறிஞர்கள் தமிழில், புதிதாகத் தோன்றியுள்ள எழுத்து முறைகள் எத்தகைய புதிய ரசனையை உருவாக்கியுள்ளது என்பதையும் இவை தனி மனித - சமூக உறவுகளை எவ்வாறு தாக்குகின்றன என்பதையும் அறிய முனைதல் வேண்டும். தமிழ்ப் பத்திரிகைகள், விளம்பரங்கள், தமிழ்த் திரைப் படங்கள், வாஞெலி ஆதியன எம்முறையில் தமிழைப் பயன்படுத்தியுள்ளன என்பதை அறியும் அதேநேரத்தில் இவை மக்களை முன்னேற்றப் பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் அறிதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பக பூமியின் கலாச்சாரம் வாழ்க!

- கலியுகன் -

வீதி ஓரம் செந்நெல் வயல்களும்
வீட்டின் முன்றல் பூஞ்செடி வளரும்
பாதி பழுத்த பலாக் கனி தோன்றும்
பயிர்கள் காய்த்துச் செழிப்போடு காணும்
கோதி முடிந்த குழலுடன் கன்னியர்
குளிர் நகை கொண்டு விளங்குதல் போலே
சாதி மல்லிகைப் பூமணம் வீசும்
சமய பக்தியை வளர்த்திடும் நாடு.

சிதறிய உதிரம் சில்லெனப் பாய்ந்திட
சிந்திய வியர்வைத் துளிகளைச் சேர்த்து
உதறி எறிந்த நெல்விதை போன்று
உழைப்போடு இன்ப ஓதைத் தமிழும்
நிதமொரு வளர்ச்சி புதுமெரு கூட்டியே
நேசக் கரங்கள் நீட்டி அழைக்கும்
கதலி வாழைக் கனி இலை ஆடும்
கற்பகத் தருவாம் கிளிநொச்சி நாடு.

காடாய் அன்று காட்சிகள் தந்தது
கழனி நிறைந்து கிடக்குது இன்று
மேடாய் நின்று நிலங்கள் இருந்தது
மேன்மை கொள்ளும் குளமாய் அமைந்தது
வீடாய் வீதியாய் வியத்தகு கோவிலாய்
விளங்கி இலங்கும் கிளிநொச்சிச் செல்வமே!
வாடா மலராய் வைய்கம் வாழ்த்திட
வாழ்வாய் என்றும் கலாச்சாரம் ஓங்கவே.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமம் கலை கலாச்சாரம்

தா. நா. மாணிக்கவாசகர்,
(கமத்தொழில் உத்தியோகத்தர், வட்டக்கச்சி)

மனிதப் பிறவியின் இன்றியமையாத துறைகளிலே முதலிடத்தை வகிப்பன கமம், கலை, கலாச்சாரம் ஆகிய இம் மூன்றுமென்முல் மிகையாகாது. ஒரு நாட்டிலே இவை மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று உச்ச நிலையை அடைந்து விட்டால் அந் நாடு அமைதியும் செந்தளிப்பும் பூண்டதாகத் திகழுமென்பதற்குச் சிறிதேனும் ஐயமில்லை. இதன் அடிப்படைக் காரணத்தை ஆராயப்புகுமிடத்து அதன் மூல காரணமாய் விளங்குவது கமமேயாகும்.

பிறப்பையும் இறப்பையும் இரு முக்கிய நிகழ்ச்சிகளாகக் கொண்டு சிருட்டிக்கப்பட்ட நாம் வாழ்ந்துகொண்டிருப்பதுதான்மனிதவாழ்வு.இத்தகைய மனித வாழ்வு அழிவு பெறக் கூடியதொன்று என்முல் யாரும் மறுப்பதற்கில்லை. இவ்விரு நிகழ்ச்சிகளுக்கிடையே உள்ள இடைக்காலம் ஒன்று தொடக்கம் நூறு வருடங்களென்பது நம் பண்டைக்கால மூதாதையர் கூற்று. ஆனுல் தற்போதைய புள்ளி விபரங்களின்படி மனித வாழ்வு சராசரி அறுபது வருடங்கள் தான் என்று கூறுகின்றனர். இவ்வறுபது வருடங்களையும் 0 - 20, 20 - 30, 30 - 50, 50 - 60, என நான்கு பாகங்களாக வகுக்கலாம். அதாவது முதலாம் பாகம் - பிறந்த நாட் தொடக்கம் வலிமையும் அறிவும் வளரும் காலம். இரண்டாம் பாகம் - நாம் பெற்ற வலுவையும் அறிவையும் கொண்டு அனுபவம் பெறும் காலம்.

மூன்றும் பாகம் - வலுவையும் அனுபவத்தையும் கொண்டு மன வலிமையுடன் ஒரு வேலையைச் செய்யும் காலம்.

நான்காம் பாகம் - வலுக்குன்றிய காலம் ஆனுல் அனுபவம் கூடிய காலம், இக்காலம் வளரும் சமுதாயத்திற்கு வழிகாட்டியாக அமையுங் காலமாகும்.

நாமெக்காரியத்தைச் செய்ய முற்பட்ட போதிலும் போதிய அனுபவமின்றிச் செய்து விட முடியாது. இத்தகைய அரிய பெரிய அனுபவத்தை நாம் யாரிடமாவது இரவலாகவோ பணத்திற்கோ, அன்றிக் களவாடியோ பெற்று விட முடியாது. எத்தனையோ புத்தம் புது கருத்துக்களையும் பெற முடியாத அரிய அறிவுகளையும் எழுத்தின் வாயிலாகப் பெறும் நாம் இந்த அனுபவத்தை எழுத்தினுற் கூடப் பெற்றுவிட முடியாது. இவ்வனுபவம் எடுத்துக் கொண்ட தொழிலிற் கருத்தூன்றிச் செயற்படும் முயற்சியினுல் கிடைக்கக்கூடியதொரு பெரும் புதையலாகும்.

ஒருவர் அறுபது வருடங்கள் வாழ்ந்து விட்டார் என்று கூறின் அவர் 3 ஆம் கூற்றிலேதான் கூடிய பாகம் தனது சமுதாயத்திற்கு நற்பலனை ஈட்டியிருக்க முடியும். அதாவது வலிமையும் அனுபவமும் ஒருங்கே அமைந்தாற்தான் ஒருவரை மனத்திடத்தோடு ஒரு தொழிலில் ஈடுபடச் செய்ய முடியும். இத்தகைய வலுவும் அனுபவமும் 3ஆம் பாகத்திலேதான் கூடுதலாகக் காணப்படுகின்றது. இப்பாகத்தின் எல்லைக் காலத்தைக் கணக்கிடுகையில் அக்காலம் இருபது வருடங்கள் மட்டுமேயாகும். இதை இன்னும் சிறிது ஊன்றிக் கணக்கிடுகையில் பத்து வருடம் இராக்காலமும் பத்து வருடம் பகற்காலமுமாகும். இதிலிருந்து நாம் அறியக்கூடியது ஒருவர் அறுபது வருடங்கள் வாழ்ந்தாரெனின், அவர் ஆகக் கூடியது பத்து வருடங்கள் மட்டுமே தன் கண்களால் பார்த்து தானுகவே சமுதாயத்திற்கு வேலை செய்தவரென்று கூறலாம். எனவே இவ்வரிய பெரிய காலத்திலே நாம் நம் சமுதாயத்தினருக்கு நன்மையா அன்றேல் தீமையா செய்யவேண்டுமென்பதை வாசகர்களிடமே கேட்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஒவ்வொருவரும் நம் சமுதாயம் உச்ச நிலையை அடையச் சேவை செய்ய வேண்டும் எனின் இரண்டாம் பாகத்திலே எவ்வளவு அனுபவம் பெற்ருேமோ அவ்வனுபவம் நாமாற்றப் போகும் சேவைக்கு பிரதிகூலமாக அமையும். உதாரணமாக, ஒரு பிள்ளை தன் இளம் பிராயத்திலேயே சரி வரக் கல்வி பயின்று அதைத் தொழிலிலே செயற்படுத்தத் தனது இரண்டாம் பாகத்திலே உள உறுதி பெற்றிருப்பின் அவர் கூடிய பாகம் சமுதாயத்திற்குச் சேவையாற்றியுள்ளார் என்று கூற முடியும். ''தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்'' என்ற நம் ஆன்ருேர் முதுமொழி இங்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. இதிலிருந்து நாமின்னுமொரு கொள்கை அறிய வேண்டியுள்ளது.

நான்காம் பாகத்திலுள்ள ஒவ்வொருவரும் முதலாம் இரண்டாம் பாகத்திலுள்ள இளையோருக்குத் தங்கள் அனுபவத்தைச் சரிவரப் புகுத்த வேண்டுமெனின் எம் சமுதாயத்தினர் முன்னேற்றப் பாதையில் ஏறு நடைபோட முடியுமென்பதிற் சிறிதேனும் ஐயமில்லை. ஆனல் மேடைப் பேச்சின் மூலம் இதை எடுத்தியம்ப முடியுமென எண்ணுவது பேதமையாகும். இன்றைய இளைஞர்களின் மாற்றத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது அவர்களிடம் குற்றமெதுவுமில்லை. ஆனல் அனுபவமின்றி ஊட்டப்பட்ட கல்வியின் மூலம் ஆக்கப்பட்டதென்றே கூறலாம். சமுதாயத்தை முன்னேற்ற ஒருவர் பெற்ற அனுபவத்தை பிரசங்கமூலமோ அன்றி எழுத்து மூலமோ போதிக்க முடியும். இப்படிப் பெறுவதைக் கல்வியென்று கூறமுடியும். கல்வியைப் பெற்றவர்கள் தாம் மட்டும் செயலிலீடுபடாமல், அதனை மற்றயவர்களுக்குப் போதிப்பதோ புத்தங்கள் எழுத முயல்வதோ ஒருவித திருத்தத்தையும், ஏற்படுத்தமாட்டாது. இதனை அடிப்படையாகக் கொண்டே இன்றய கல்வித் திட்டமும் தொழிற் கல்வியாக அமைக்கப்பட்டுள்ளது.

இன்றைய இளைஞர்களுக்கு விவசாயத்தில் அனுபவம் கொடுத்து அதன் மூலம் பயனடையச் செய்யும் நோக்கமாக எத்தனையோ திட்டங்கள் இன்று உருவாகியுள்ளன. வாலிபர்களுக்கு இறைப்புப் பாசன வசதியும், குடியானவர்களுக்குக் குளப்பாசன வசதியும் கொடுக்கப்பட்ட பல திட்டங்களும் காணப்படுகின்றன. இத்தகைய திட்டங்கள் மேற்கூறிய வழி முறைகளாற் பாய்ச்சப்படும் நீரிலேதான் தங்கியுள்ளது.

கமம் என்று சொல்லும்போது மனித வாழ்விற்கு அத்தியாவசியமான பொருட்களை உற்பத்தி செய்வதையே குறிப்பிடுகின்றது. கமச் செய்கைக்கு நீர், மண், விதை, அனுபவம் ஆகிய நான்கு காரணிகளும் அவசியமாகும். இந்நான்கினுள்ளும் நீரில்லாவிடில் கமம் இல்லாமற் போய்விடும். சில வேளைகளில் நீர் இருந்தும் அளவிற்கு மீறுவதால் அழிவேற்படுகின்றது. இத்தகைய சக்தி வாய்ந்த நீரை நாம் மழை வீழ்ச்சிகளிலிருந்தும் நில ஊற்றுக்களிலிருந்தும் பெறுகின்ருேம். அதிக மழையினுல் உண்டான ஆறுகள் ஓடிச் சென்று கடலிலே கலக்கின்றன. பண்டை நாகரீகங்களெல்லாம் நதிக் கரையிலேயே உருவாகின என்று பழங் காலச் சரித்திரங்கள் எடுத்துக்கூறுகின்றன. ஆற்றை மண் கட்டுக்களினுலே தடை செய்து உருவாக்கிய தேக்கங்களையே நாம் குளங்களென்கிருேம். இப்படி உருவாக்கப்பட்ட குளங்களிலிருந்து நீரை வாய்க்கால் மூலம் எடுத்துக் கமங்களுக்குப் பரவச் செய்வதால் மழையில்லாக் காலங்களிற் கமம் செய்யப் படக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு வாய்க்கால்கள் மூலம் நீரைப் பாய்ச்சி கமம் செய்வதாயின் தரை மட்டப்படுத்தப்பட்ட சம தரையாக இருக்கவேண்டும். இல்லையெனில் நீர் பயிர்களின் தேவைக்கேற்றவாறு எல்லா இடமும் பரவ முடியாது. ஆனல் இப்படியான நீரை அளவுடன் பாவிப்பது குறைவாகும். அதிகப்பற்றுக ஒரு ஏக்கருக்கு பத்து அடிவரையில் நீர் விநியோகிக்கப்படுகின்றது. ஆனல் எப் பயிருக்கும் 3 - 4 அடிக்கு மேற்பட்ட நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படுவதில்லை: இதனாலே தேவையிலும் பார்க்க இரு மடங்கு அதிகமான நீர் வீணே விரயமாகின்றது. இவ்வாறு விரயமாகும் நீரைத் தடுப்பதற்குக் குழாய் மூலம் விநியோகஞ் செய்யும் விதியைக் கையாளலாம்.

மண்ணை எடுத்துக்கொண்டால் அதிலே பல பிரிவுகளுண்டு, ஆனால் எவ்வித மண்ணிலும் அதற்கென உரிய பயிரைச் செய்ய முடியும். பயிர்களிலே நீர்த் தேக்கத்தைத் தாங்கக்கூடியபயிரெனின்நெல் மாத்திரமேயாகும். மற்றெல்லாப் பயிர்களும் நீர்த் தேக்கத்தைசகிக்கும் தன்மையற்றவையாகும். நெல்லும் அறுவடைக் காலத்தில் நீர்த்தேக்கத்தைத் தாங்க மாட்டாது. எவ்வித மண்ணிலிருந்தும் கூடிய பலனை எடுப்பதற்கு வடிகால்கள் அவசியமானவை. ஆனால் இதனைக் கமக்காரர்கள்பிரதானமாகக்கவனிப்பதில்லை. எப்பயிரைப்பயிரிட்டபோதிலும் நீர்ப்பாசனமும் வடிகாலும் நன்ருக அமையப்பெற்ருல் சிறந்த பலனையடையலாம். நீர் வசதிக்கேற்றபடி ஏறக்குறைய முன்னூறு வகையான பயிர்கள் செய்கைக்கு இருக்கின்றன, இன்று இவ்வுலகிலே ஜனத்தொகை அதிகரிப்பதால் எப் பயிரைப் பயிரிட்டாலும் உயரிய இலாபம் கிடைக்கும்.

ஒரு நாட்டிலே அளவிற்கதிகமான பொருட்களிருப்பின் அந்நாடு ஒருபோதும் பிற நாட்டை எதிர்பார்க்காது இயங்கமுடியும். இன்று இலங்கை பற்ருக்குறையின் காரணத்தாலேதான் பிற நாடுகளையே நம்பியிருக்கவேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது. இதனை நிவிர்த்தி செய்ய அரசாங்கமும் பல வழிகளை வகுத்துள்ளது. ஆனால் நீரைச் சேதமின்றிப் பயன்படுத்த எவ்வித முறைகளையும் கையாளப்படாமை கவலைக்குரிய விடயமே. ஒரு நாடு பற்ருக்குறையில்லாது தன்னிறைவு பெற்று மகிழும் போதுதான் கூடிய ஒற்றுமை பிறக்கின்றது. இந்த ஒற்றுமையிலிருந்து பிறப்பதுதான் நடன, நாட்டிய, சங்கீதங்கள். இவை யாவும் ஒருங்கமையும் போதே கலாச்சாரம் என்ற ஒன்று பிறக்கின்றது.

நீரின்றிக் கமம் இல்லை.
வடிகாலின்றி பயிரில்லை.
பயிரின்றி உணவில்லை.
உணவின்றி உயிரில்லை.
உயிரின்றி கலையில்லை.
கலையின்றிக் கலாச்சாரமில்லை

ஒருவர் வாலைப் பிடித்து புலியைப் பிடிக்க முயல்வது எவ்வளவு கடினமோ, அதேபோன்றுதான் கலாச்சாரத்தைக் கொண்டு கலையைப் பிடிக்க முயல்வதுமாகும். கலையைக் கொண்டு கமத்தைப் பிடிக்க முடியாது, கமத்தைக் கொண்டு வடிகால் தண்ணீரைப் பிடிக்க முடியாது, இதன் உண்மை தண்ணீரைக் கொண்டுதான் மற்றெல்லாவற்றையும் சுலபமாகப் பிடிக்க முடியும்.

மேற் கூறியவற்றை முறையுடன் கவனிப்போமாயின் எமது சமுதாயம் மேன்மையடைவதற்கு ஒரு தடையுமிருக்காது.

முறையுடன் முன்னேறத் தொண்டு புரிவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயம் செய்யுங்கள் !

# விஜயலட்சுமி கபே

கண்டி வீதி, — பரந்தன்

★ சிறந்த தேநீர்
★ சுகாதார முறைப்படி அமைந்த உணவுகள்
★ சிற்றுண்டி வகைகள்
★ பசும் பால்
★ கோப்பி முதலியவற்றிற்கு

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்
உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்
குறித்த நேரத்தில் ஓடர் வகையும் செய்து கொடுக்கப்படும்.

**VIJAYALUXMY CAFE**

*(Prop.: S. P. Subramaniam & Bro.)*

**KANDY ROAD, — PARANTHAN.**

# கிளிநொச்சி ஏஜென்சி

உரிமையாளர் : மு. பொ. பொன்னையா

ஏக விநியோகஸ்தர்

றலி சைக்கிளும் உதிரிப் பாகங்களும்

கண்டி வீதி, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளரும் நல் நகர்

## பண்டிதர் மு. ஆறுமுகம்

தாமரை மொட்டுப்போன்ற குளங்கள் சில. விரிந்த மலர்போன்றன வேறு சில குளங்கள். இவை கிளிநொச்சித் தொகுதியில் காணப்படுகின்றன. மொட்டுவடிவமானவை நாகர் காலத்தன. விரிந்தவை இயக்கர்களின் குளங்கள். ஆறுகளையும் ஓடைகளையும் மறித்துக் கட்டிய தேக்கங்கள் மொட்டுவடிவன. வானம் வழங்கும் நீரைச் சேர்ப்பதற்கு மலர்வடிவான அகன்ற கரையிட்ட குளங்கள் ஆக்கப்பட்டன. இந்த இருவின நீர்த்தேக்கங்களும் நமது பண்டை மக்களின் வாழ்வுச் சொத்துக்கள். நீரைச்சேமித்து நெல்லைப் பெருக்கினர்.

''நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்''

என்கின்றது புறநானூறு. நீரும் நெல்லும் உயிராகவுள்ள மக்களுக்கு, மன்னனும் உயிராக இருந்தான். மன்னர்கள் அமைந்த காலம், மக்களும் அமைந்து வாழ்ந்தனர். அவர்கள் வெகுண்டு போர் புரிந்த வேளை மக்களும் நாடு பெயர்ந்து வாழ்ந்தனர். இது ஒரு நியதியானது. இதனால் நாடு காடாதலும், காடு நாடாதலும் சுழலும் சக்கரம் போலாயிற்று. இந்த வரிசையில் கிளிநொச்சியும் சேர்ந்திருந்தமை வியப்பல்ல. பல நூற்றாண்டுகள் செல்ல மக்கள் மீளவும் இங்கு வாழ்வு தொடங்கினர். வடமாநில அரசாங்க அதிபரின் கீழ் அரசகருமங்கள் நடந்து வருகின்றன. காடு கெடுத்து நாடாக்கி வீடும் விளைநிலமும் வழங்கி குடியமரச்செய்து மக்களுக்கு வாழ்வளிக்கின்றது நமது அரசாங்கம். கணேசபுரம் முதல், வட்டக்கச்சி, முரசுமோட்டை, மல்லாவி, உருத்திரபுரம், விசுவமடு, திருவையாறு. கனகபுரம் வரை இருபதுக்கும் மேற்பட்ட குடியேற்றத்திட்டங்கள் இந்த வரிசையில் உள்ளன. எண்பத்திரண்டு வித்தியாலயங்களும், ஒன்பது மகாவித்தியாலயங்களும் இளைஞர்களின் கல்விக்கு உதவுகின்றன. இலங்கையிலே ஒரு சிறந்த நிலையமாக பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை விளங்குகின்றது. அத் தொழிற்சாலையில் தொழில் புரிவோரில் பெரும்பாலார் உள்ளூர் வாலிபர்களே. கண்டாவளையில் ஓட்டுத்தொழிற்சாலை ஒன்று நன்கு இயங்குவதுடன் இத்தொகுதி மக்களுக்கு தொழில் கொடுத்தும் உதவுகின்றது. இரண்டு நீர்த்தேக்கங்களை இணைத்து 1918-ம் ஆண்டில் புதுப்பித்த இரணைமடுக்குளம் கிளிநொச்சி மக்களின் பெரும் செல்வமாகும். அதன் கீழ் ஆயிரக்கணக்கான ஏக்கர் செந்நெல் விளையும் நன்நிலமுள்ளது. புதுமுறிப்பு, பழையமுறிகண்டி, ஆலங்குளம், சேரன் கண்டல் ஆறு, போன்ற நூற்றுக் கணக்கான பழைய குளங்களை அரசாங்கம் புதுக்கி வேளாண்மையை விரிவுபடுத்தியுள்ளது.

மக்கள் வாழ்வுமலர அரசாங்கம் தன்னாலான சகலவசதிகளையும் செய்து கொடுத்திருப்பினும் குடியேறும் மக்களின் ஆர்வமும் வேகமும் மகிழக் கூடியஅளவில் இல்லை. யாழ் குடாநாட்டில் சகல வசதிகளையும் அனுபவித்துக்கொண்டு வாழ்ந்தவர்கள் புது இடம் செல்லத் தயங்கினர். கொழுத்துத்போயிருந்த பணக்காரர் குடியேறச் சென்ற மக்களைத் தாழ்வுக்கண்ணால் நோக்கினர். கேர்ணல் மொழிகளால் அழைத்தனர். இது ஆரம்பகாலத்தில் நடந்தது. கடந்த முப்பது ஆண்டுகளில் நிலைமை முற்றுகமாறிவிட்டது.

''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்''

என்கின்றது தேவர் குறள். பண்புடையவர்கள் வாழ்தலால் உலகு நன்கு வாழ்கின்றது. அவர்கள் இல்லையானால் மாய்ந்து மண்கவ்விப்போம்-வாழ்வு சுவையாது என்பது பொருள். எனவே மக்கள் வாழ்வு ஒளிர-அது நன்கலமாக-பண்புடைமை மக்களில் பதிதல் வேண்டும். வளரும் நாடுகளில் இந்தப் பண்புடைமையும் போற்றி வளர்க்கப்பட வேண்டும் கிளிநொச்சியைப் பொறுத்தவரை இளைஞர்களைப் பண்புற வளர்க்கும் ஸ்தாபனங்கள் பல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதாரக் கல்விக் குருகுலம்

நகருக்குச் சமீபமாக இரண்டு மைல் மேற்கே இந்து மகாவித்தியாலயம் உளது. அதனை உள்ளடக்கி ஐம்பது ஏக்கர் நிலம் இக் குருகுலத்துக்கு ஆதாரமாயுள்ளது. அதனை நன்கு நடத்தும் ஒரு குடும்பம் உளது. இருவரும் ''அப்பு'' ''அம்மா'' என அங்குள்ள அனைவராலும் அன்பாக அழைக்கப்படுகின்றனர். மாணவிகளை அம்மா திறம்பட அருளுடன் நடாத்து கின்றார். அப்பு குருகுல மாணவர்களின் பிதாவாகக் காட்சியளிக்கின்றார். ஊதியம் பெறும் பலரின் உடலுழைப்புடன் குருகுல மாணவரும் தோட்டம் செய்வர். மிளகாய் வாழை, உட்பட சகல பயிர்களும் பயிரிடப்படுகின்றன. குருகுல மாணவ மாணவிகள், இந்து மகாவித்தியாலயத்தில் முழுநேரக் கல்வி பயில்கின்றனர். காந்தீனி கேதனில் பயிற்சி பெற்ற திரு. வே. கதிர வேலு இந்துமகாவித்தியாலய அதிபராக இருந்து இளைப்பாறியவர். இவர் (அப்பு) சாதி, சமய பேதங்கடந்த ஒரு சமத்துவ அடிப்படையில் ஆதாரக்கல்விக் குருகு லத்தை நடாத்தி வருகின்றார். இங்கு நெசவு— பன்னவேலை — தையல் — ஓவியம் என்பன பயிலப்படுகின்றன. 1952-ம் ஆண்டில் பண்டிதமணி உயர்திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களால் கிளிநொச்சி இந்துசபையார் சார்பில் தொடக்கிவைக் கப்பட்ட வித்தியாலயமே இன்று குருகுலம் தாங்கும் பெரு வித்தியாலயமாகக் காட்சி தருகின்றது. நடனம், சங்கீதம், பேச்சுக் கலைகளில் புகழ் பெற்ற குருகுல மாணவர் பெரும் பண்புடன் வாழ்கின்றனர்.

## மகாதேவ ஆஸ்ரமம்

அருள் திருவடிவேல் சுவாமிகளின் ஆச் ரமமாய் விளங்கும் இந்நிலையத்தில் ஈழ நாட்டிலுள்ள அறிஞர்கள் பலர் அடிக்கடி வருகை தருவர். இந்தியாவிலிருந்து வரும் தபோதனர்கள் சமயத் துறவிகளும் சென்று சமய அறிவுரைகள் செய்வர். இந்து சமய மாணவ, மாணவிகளுக்கும் சமய வகுப் புக்கள் நடைபெறுகின்றன. சைவ கலாச் சார நிலையமாக விளங்கும் இத்த ஆச்சிர மத்தில் அடிக்கடி சமயகுருபூசைகள் நடை பெறுகின்றன.

## ஆரோபணம்

''ஆரோபணம்'' என்பது ''எடுத்துக் கொள்ளப்பட்டது'' என்னும் பொருளில் வழங்கும் சொல். அது தேவமாதாவைக் குறித்து அந்த அன்னையாரின் பெயரால் நிலையத்தைக் குறிக்கின்றது. குருகுலத் துக்கு அண்மையில் மேற்குப்புறமாக ஒரு வீதி மகாதேவ ஆச்சிரமம் நோக்கிச் செல் கின்றது. அவ்வீதியின் தொடக்கத்தில் ஆரோபணம் அமைந்துள்ளது. அதன் முற்றத்தில் தூய வெண்ணிறமானவுருவில் நின்று மாதா அருள்ததும்ப ஆசிபொழி கின்றார். கட்டளைக்குருவாக வண. G. நேசநாயகம் அவர்கள் இருக்கிறார்கள். யாழ்/பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண J. மதுரநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெறும் இந்நிலையத்தில், நாற்பது மாணவர்கள்வரை கல்வி பயில்கின்றனர். ஓய்வுநேரங்களில் அச்சுவேலை—தச்சுத் தொழில்—தோட்டவேலை—என்பன பயில் கின்றனர். இயந்திரங்களை இணைக்கும் தொழில் பெருமளவில் இங்கே தொடங்கும் ஆரம்பவேலைகள் நடைபெறுகின்றன. கட்டளைக்குருவானவரின் ஆதரவுடன் இங் குள்ள மாணவர்கள் மிக்க கலகலப்புடன் நன்கு வாழ்கின்றனர்.

## காந்தி நிலையம்

இலங்கைக் காந்தி சேவாசங்கத்தால் நடாத்தப்படும் இந்த நிலையம் அக்கரா யனில் 300 ஏக்கர் காணியையும் சொந்த மாகவுடையது. பெருந்தகை ஜெயப்பிர காஸ் நாராயணன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்ற காந்திக் கிராமமும் அந் நிலத்தில் தொடக்கப்பட்டுள்ளது. காந்தி நிலையம் என அழைக்கப்படும் தலைமை நிலையம் உருத்திரபுரம் கிளிநொச்சி வீதி யில் மூன்றேகால் மைலில் உள்ளது. நெசவு— தோட்டவேலை — பசுப்பண்ணை— என்பன ஊதியம் பெறுவோரின் உதவி யுடனும், மாணவர்களின் ஈடுபாட்டு டனும் நடைபெறுகின்றன. நிலையத்தை திரு. க. வேலாயுதபிள்ளை (பெரியண்ணன்) தூய சிந்தையுடன் நடாத்துகின்றார். இந்நிலையம் மிகப்பெரிய ஸ்தாபனமாகு மெதிர் காலத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குடும்பக் கன்னியர் மடம்

கிளிநொச்சி உருத்திரபுரம் வீதியில் நான்காவது மைலில் இந்தப்புனித சோதரிகள் மடம் உளது. இங்கு மாணவிகள் பலர் சீரியமுறையில் பண்புடன் வளர்க்கப்படுகின்றனர். அவர்கள் சென் பற்றிமா வித்தியாலயத்தில் கல்வி பயில்கின்றனர். ஓய்வு நேரங்களில் பாய்பின்னுதல் நெசவு-தையல்—தோட்டம் முதலிய வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

## கருணா நிலையம்

இங்கிலாந்தின் 'உவேஸ்' சைப் பிறப்பிடமாகக்கொண்ட செல்வி மி. வை. ஹர்கின்ஸ் என்னும் சன்னியாசியினி இந்த ஸ்தாபனத்தைப் பல ஆண்டுகளாக நடாத்தி வருகின்றார். கொழும்பு பிஷப்பின் கீழ் வண நவரத்தினம் போதகரால் தொடங்கி நடாத்தப்பட்ட இந்த நிலையம் பெண்களின் — கன்னியர்களின் — வரப்பிரசாதமாய் உள்ளது. இதன் முக்கியமான தொழில் தையல். இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் கன்னியர்கள் இங்கு வந்து அரிய தையற்கலை பயின்று செல்கின்றனர். பாதுகாப்பற்ற கன்னியர்க்குப் பாதுகாப்பளித்து வாழுவழி வகுக்கும் ஸ்தாபனமாக இது விளங்குகின்றது. சன்னியாசினி செல்வி மி. வை. ஹர்கின்ஸ் ஒக்ஸ்வேட் (Oxford) M. A. பட்டதாரியாவார். மேனாட்டில் பிறந்து கீழ் நாடுவந்து மக்களின் தொண்டே உய்யுநெறியென வாழும் அந்த அம்மையாரின் பாதுகாப்பில் இளம் கன்னியர் பலர் வாழ்வு பெற்றுள்ளனர். அவரது அயராத தொண்டு போற்றுதற்குரியது.

## லும்பினி விகாரை

இது ஒரு பௌத்த கலாச்சார நிலையம். பகவான் புத்தர் அவதரித்த பூந்தோட்டம் 'லும்பினி' அதன் பெயரால் அமைந்த இந்த நிலையம் கிளிநொச்சி நகர வடபகுயில் கண்டி வீதி ஓரமாக அமைந்துள்ளது 1948ல் கௌரவனீய R. தம்மவன்ச தேரோ அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது. யாழ்/சிங்கள மகாவித்தியாலய உபஅதிபர் கௌரவனீய K. தம்மிந்திஸ்ச தேரோ B. A. அவர்கள் தற்பொழுது நடாத்திக்கொண்டிருக்கிறார். சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாலர் நிலையம் ஒன்று நன்கு நடாத்தப்படுகின்றது. தென்னிலங்கையிலிருந்து தினமும் வந்து குவியும் நல்லெண்ணத் தூதர்கள் போன்ற சிங்கள யாத்திரிகர்கள் இங்கு தங்கி வடபகுதிக்குச் செல்கின்றனர். விகாரையின் நுழைவாயிலில் இடது பக்கமாக அமைந்துள்ள புத்தபகவானின் தருணவுருவமைந்த சிலையின் அருட்பார்வை வடக்கு நோக்கி இருப்பது சிங்கள தமிழரை அன்பினால் இணைப்போம் என்னும் குறிப்புடன் அமைந்துள்ளது.

## நவஜீவனம்

இது ஓர் ஆண்கள் நிலையம். பரந்தனில் இருந்து இரண்டரைமைலில் முரசுமோட்டையில் உளது. அமெரிக்க மிசனரிமாரின் பாதுகாப்புக்கு உள்ளான இந்த நிலையம் பிஷப் அம்பலவாணரின் கீழ் இயங்குகின்றது. வண. தம்பிராஜா திருமதி அருள் தம்பிராஜா இவர்களால் நன்கு நடாத்தப்படுகின்றது. விவேகிகளாயுள்ள பல மாணவர்களை நல்ல பண்பு பெற நடாத்துகிறார்கள். இங்கு மிகமுக்கியமானது இளைஞர் நகரமே. புதுவகையான அமைப்புக்களுடன் கூடிய இந்த ஸ்தாபனம் வளர்பிறை போன்று புகழ் பொழிய வளர்கின்றது.

உபகாரம் செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாதிருத்தலே நற்குணம். அதனை மற்றொரு வகையிற் சொன்னால் பண்புடைமை எனலாம். பண்பு எவ்வளவுக்கு உயர்கின்றதோ அவ்வளவுக்கு மனிதகுலம் சுகம் பெறும். அந்த இலக்கைநோக்கிப் பீடுநடையிட்டு 'வளரும் நன்னகர்க்' கிளிநொச்சி மக்களும், இளைஞர்களும் உயர்வடைய இறைவருள் பாலிப்பதாக.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதாரக் கல்விக் குருகுலம்

நகருக்குச் சமீபமாக இரண்டு மைல் மேற்கே இந்து மகாவித்தியாலயம் உளது. அதனை உள்ளடக்கி ஐம்பது ஏக்கர் நிலம் இக் குருகுலத்துக்கு ஆதாரமாயுள்ளது. அதனை நன்கு நடத்தும் ஒரு குடும்பம் உளது. இருவரும் "அப்பு" "அம்மா" என அங்குள்ள அனைவராலும் அன்பாக அழைக்கப்படுகின்றனர். மாணவிகளை அம்மா திறம்பட அருளுடன் நடாத்துகின்றார். அப்பு குருகுல மாணவர்களின் பிதாவாகக் காட்சியளிக்கின்றார். ஊதிபம் பெறும் பலரின் உடலுழைப்புடன் குருகுல மாணவரும் தோட்டம் செய்வர். மிளகாய் வாழை, உட்பட சகல பயிர்களும் பயிரிடப்படுகின்றன. குருகுல மாணவ மாணவிகள், இந்து மகாவித்தியாலயத்தில் முழுநேரக் கல்வி பயில்கின்றனர். காந்தினிகேதனில் பயிற்சி பெற்ற திரு. வே. கதிரவேலு இந்துமகாவித்தியாலய அதிபராக இருந்து இளைப்பாறியவர். இவர் (அப்பு) சாதி, சமய பேதங்கடந்த ஒரு சமத்துவ அடிப்படையில் ஆதாரக்கல்விக் குருகுலத்தை நடாத்தி வருகின்றார். இங்கு நெசவு— பன்னவேலை — தையல் — ஓவியம் என்பன பயிலப்படுகின்றன. 1952-ம் ஆண்டில் பண்டிதமணி உயர்திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களால் கிளிநொச்சி இந்துசபையார் சார்பில் தொடக்கிவைக்கப்பட்ட வித்தியாலயமே இன்று குருகுலம் தாங்கும் பெரு வித்தியாலயமாகக் காட்சி தருகின்றது. நடனம், சங்கீதம், பேச்சுக் கலைகளில் புகழ் பெற்ற குருகுல மாணவர் பெரும் பண்புடன் வாழ்கின்றனர்.

## மகாதேவ ஆஸ்ரமம்

அருள் திருவடிவேல் சுவாமிகளின் ஆச்ரமமாய் விளங்கும் இந்நிலையத்தில் ஈழ நாட்டிலுள்ள அறிஞர்கள் பலர் அடிக்கடி வருகை தருவர். இந்தியாவிலிருந்து வரும் தபோதனர்கள் சமயத் துறவிகளும் சென்று சமய அறிவுரைகள் செய்வர். இந்து சமய மாணவ, மாணவிகளுக்கும் சமய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சைவ கலாச்சார நிலையமாக விளங்கும் இத்த ஆச்சிரமத்தில் அடிக்கடி சமயகுருபூசைகள் நடைபெறுகின்றன.

## ஆரோபணம்

"ஆரோபணம்" என்பது "எடுத்துக் கொள்ளப்பட்டது" என்னும் பொருளில் வழங்கும் சொல். அது தேவமாதாவைக் குறித்து அந்த அன்னையாரின் பெயரால் நிலையத்தைக் குறிக்கின்றது. குருகுலத்துக்கு அண்மையில் மேற்குப்புறமாக ஒரு வீதி மகாதேவ ஆச்சிரமம் நோக்கிச் செல்கின்றது. அவ்வீதியின் தொடக்கத்தில் ஆரோபணம் அமைந்துள்ளது. அதன் முற்றத்தில் தூய வெண்ணிறமானவுருவில் நின்று மாதா அருள்ததும்ப ஆசிபொழிகின்றார். கட்டளைக்குருவாக வண. G. நேசநாயகம் அவர்கள் இருக்கிறார்கள். யாழ்/பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண J. மதுரநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெறும் இந்நிலையத்தில், நாற்பது மாணவர்கள்வரை கல்வி பயில்கின்றனர். ஓய்வுநேரங்களில் அச்சுவேலை—தச்சுத் தொழில்—தோட்டவேலை—என்பன பயில்கின்றனர். இயந்திரங்களை இணைக்கும் தொழில் பெருமளவில் இங்கே தொடங்கும் ஆரம்பவேலைகள் நடைபெறுகின்றன. கட்டளைக்குருவானவரின் ஆதரவுடன் இங்குள்ள மாணவர்கள் மிக்க கலகலப்புடன் நன்கு வாழ்கின்றனர்.

## காந்தி நிலையம்

இலங்கைக் காந்தி சேவாசங்கத்தால் நடாத்தப்படும் இந்த நிலையம் அக்கராயனில் 300 ஏக்கர் காணியையும் சொந்தமாகவுடையது. பெருந்தகை ஜெயப்பிரகாஸ் நாராயணன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்ற காந்திக் கிராமமும் அந்நிலத்தில் தொடக்கப்பட்டுள்ளது. காந்தி நிலையம் என அழைக்கப்படும் தலைமை நிலையம் உருத்திரபுரம் கிளிநொச்சி வீதியில் மூன்றேகால் மைலில் உள்ளது. நெசவு— தோட்டவேலை — பசுப்பண்ணை— என்பன ஊதிபம் பெறுவோரின் உதவியுடனும், மாணவர்களின் ஈடுபாட்டுடனும் நடைபெறுகின்றன. நிலையத்தை திரு. க. வேலாயுதபிள்ளை (பெரியண்ணன்) தூய சிந்தையுடன் நடாத்துகின்றார். இந்நிலையம் மிகப்பெரிய ஸ்தாபனமாகுமெதிர் காலத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குடும்பக் கன்னியர் மடம்

கிளிநொச்சி உருத்திரபுரம் வீதியில் நான்காவது மைலில் இந்தப்புனித சோதரிகள் மடம் உளது. இங்கு மாணவிகள் பலர் சீரியமுறையில் பண்புடன் வளர்க்கப்படுகின்றனர். அவர்கள் சென் பற்றிமா வித்தியாலயத்தில் கல்வி பயில்கின்றனர். ஓய்வு நேரங்களில் பாய்பின்னுதல் நெசவு-தையல்—தோட்டம் முதலிய வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

## கருணா நிலையம்

இங்கிலாந்தின் 'உவேஸ்' சைப் பிறப்பிடமாகக்கொண்ட செல்வி மி. வை. ஹார்கின்ஸ் என்னும் சன்னியாசினி இந்த ஸ்தாபனத்தைப் பல ஆண்டுகளாக நடாத்தி வருகின்ருர். கொழும்பு பிஷப்பின் கீழ் வண நவரத்தினம் போதகரால் தொடங்கி நடாத்தப்பட்ட இந்த நிலையம் பெண்களின் — கன்னியர்களின் — வரப்பிரசாதமாய் உள்ளது. இதன் முக்கியமான தொழில் தையல். இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் கன்னியர்கள் இங்கு வந்து அரிய தையற்கலை பயின்று செல்கின்றனர். பாதுகாப்பற்ற கன்னியர்க்குப் பாதுகாப்பளித்து வாழவழி வகுக்கும் ஸ்தாபனமாக இது விளங்குகின்றது. சன்னியாசினி செல்வி மி. வை. ஹார்கின்ஸ் ஒக்ஸ்வேட் (Oxford) M. A. பட்டதாரியாவார். மேனாட்டில் பிறந்து கீழ் நாடுவந்து மக்களின் தொண்டே உய்யுநெறியென வாழும் அந்த அம்மையாரின் பாதுகாப்பில் இளம் கன்னியர் பலர் வாழ்வு பெற்றுள்ளனர். அவரது அயராத தொண்டு போற்றுதற்குரியது.

## லும்பினி விகாரை

இது ஒரு பௌத்த கலாச்சார நிலையம். பகவான் புத்தர் அவதரித்த பூந்தோட்டம் 'லும்பினி' அதன் பெயரால் அமைந்த இந்த நிலையம் கிளிநொச்சி நகர வடபகுயில் கண்டி வீதி ஓரமாக அமைந்துள்ளது 1948ல் கௌரவனீய R. தம்மவன்ச தேரோ அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது. யாழ்/சிங்கள மகாவித்தியாலய உபஅதிபர் கௌரவனீய K. தம்மிந்திஸ்ச தேரோ B. A. அவர்கள் தற்பொழுது நடாத்திக்கொண்டிருக்கிருர். சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாலர் நிலையம் ஒன்று நன்கு நடாத்தப்படுகின்றது. தென்னிலங்கையிலிருந்து தினமும் வந்து குவியும் நல்லெண்ணத் தூதர்கள் போன்ற சிங்கள யாத்திரிகர்கள் இங்கு தங்கி வடபகுதிக்குச் செல்கின்றனர். விகாரையின் நுழைவாயிலில் இடது பக்கமாக அமைந்துள்ள புத்தபகவானின் தருணவுருவமைந்த சிலையின் அருட்பார்வை வடக்கு நோக்கி இருப்பது சிங்கள தமிழரை அன்பினுல் இணைப்போம் என்னும் குறிப்புடன் அமைந்துள்ளது.

## நவஜீவனம்

இது ஓர் ஆண்கள் நிலையம். பரந்தனில் இருந்து இரண்டரைமைலில் முரசுமோட்டையில் உளது. அமெரிக்க மிசனரிமாரின் பாதுகாப்புக்கு உள்ளான இந்த நிலையம் பிஷப் அம்பலவாணரின் கீழ் இயங்குகின்றது. வண. தம்பிராஜா திருமதி அருள் தம்பிராஜா இவர்களால் நன்கு நடாத்தப்படுகின்றது. விவேகிகளாயுள்ள பல மாணவர்களை நல்ல பண்பு பெற நடாத்துகிருர்கள். இங்கு மிகமுக்கியமானது இளைஞர் நகரமே. புதுவகையான அமைப்புக்களுடன் கூடிய இந்த ஸ்தாபனம் வளர்பிறை போன்று புகழ் பொழிய வளர்கின்றது.

உபகாரம் செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாதிருத்தலே நற்குணம். அதனை மற்ருெரு வகையிற் சொன்னுல் பண்புடைமை எனலாம். பண்பு எவ்வளவுக்கு உயர்கின்றதோ அவ்வளவுக்கு மனித குலம் சுகம் பெறும். அந்த இலக்கைநோக்கிப் பீடுநடையிட்டு 'வளரும் நன்னகர்க்' கிளிநொச்சி மக்களும், இளைஞர்களும் உயர்வடைய இறையருள் பாலிப்பதாக.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்களே, ஆதரவாளர்களே,
உங்களுக்குத் தேவையான

* பலசரக்குச் சாமான்கள்
* திறம் சுருட்டு, புகையிலை
* சகலவித சாய்ப்புச் சாமான்கள்
* யானை மார்க் குளிர்ப்பானம்

மற்றும் தேவைகளுக்கு
நியாய விலையில் கிடைக்கும் ஒரே இடம்

# VARATHAN STORES
# வரதன் ஸ்ரோர்ஸ்

ஏஜன்சி :
தங்ஸரம் பல்புகள்

கண்டி வீதி,
கிளிநொச்சி.

இதோ ஒரு நற்செய்தி
தங்களின் தேவையான

* யானை மார்க் குளிர்பானம்
* பைசிக்கிள் உதிரிப்பாகங்கள்
* சகலவித சாய்ப்புச் சாமான்கள்
* திறம் புகையிலை, சுருட்டு

மொத்தமாகவும், சில்லறையாகவும்,
நியாய விலையில் பெற்றுக்கொள்ள

# VELAVAN STORES
# வேலவன் ஸ்ரோர்ஸ்

புதிய பஸ் நிலையம்,
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்நாடக சங்கீத சம்பிரதாயம்

எஸ். பரம் தில்லைராஜா
*M. A. Dip. in Ed; Dip. in Music.*

**சங்கீத** சம்பிரதாயம் என்பது ஓர் கலைஞன் இசையில் தமக்குள்ள மனோதர்மத்தை வாய்ப்பாட்டாகவோ வாத்திய வாயிலாகவோ கற்பனை செய்து வெளிப்படுத்தும் ஓர் முறையாகும், பாரத நாட்டில் நூறு வருடங்களாக இசைப் பெரியார்கள் அனுட்டித்து வந்த கலைமுறைகளை கர்நாடக சம்பிரதாயம், இந்துஸ்தானி சம்பிரதாயம் எனக் கூறலாம். கர்நாடக சம்பிரதாயம் பெரும்பாலும் விந்தியமலைக்குத் தெற்கேயுள்ள நாடுகளில் பின்பற்றப்பட்டதெனலாம். இதுவரை தோன்றிய கலைப் பெரியார்கள் அவர்களுடைய ஞான முதிர்ச்சியினாலும் ஆராய்ச்சியினாலும் அறிந்து அனுஷ்டித்து பரம்பரையாக எமக்கு இசை வடிவங்களில் கொடுத்துள்ளார்கள். இக்கலையின் அடிப்படையான முறைகள் மாறுதலடையாவிட்டாலும் காலத்திற்குக் காலம் மாறுதல்களும் அடைந்திருக்கின்றன எனக் கூறினால் மிகையாகாது. உதாரணமாக அக்காலங்களில் ஓர் சங்கீதக் கச்சேரி பன்னிரண்டு மணி நேரம் வரையும் நடந்ததுண்டு. ஆனால் இக்காலங்களில் இதை விரும்பினாலும் சாத்தியப்படாது. கருதிகளுக்கு நிரவல் ஸ்வரம் பாடுவதிலும் பல்லவிகளை அனுலோமம், பிரதி லோமம் செய்வதும் அறுபது வருடங்களுக்கு முன்பு சம்பிரதாயத்திற்கு விரோதமாகக் கருதப்பட்டன.

நன்றாய்க் கலையை ரசிக்கக்கூடியவர்களும் சாதாரணமாய் ரசிக்கக் கூடியவர்களும் உள்ள சபையாயின் இருபாலார்க்கும் ஏற்றவாறு இசைக்கச்சேரி அமைய வேண்டும். ஒவ்வொரு காலத்திலும் இருந்த சங்கீதக்கலை அக்காலத்திலிருந்த சூழ் நிலைக்குச் சாதகமாயிருந்தது என்பதை நாம் நிர்ணயிக்கக் கூடியதாயிருக்கிறது. அக்காலத்தில் கலைஞர்களும் இரசிகர்களும் குறைவாக இருந்தாலும் அப்பொழுது கர்ண பரம்பரைகளுக்கும் இலட்சியங்களுக்கும் இன்றையவிட மிகுந்த கணிப்புக் கொடுக்கப்பட்டது. அக்காலத்திலுள்ள ரசிகர்கள் இசையின் நுட்பங்களை நன்கு விளங்கி ரசிக்கும் ஆற்றலுடையவர்களாகவும் விளங்கினார்கள். தற்காலத்திலேயுள்ள ரசிகர்களுக்கு அன்றிருந்த சங்கீத சம்பிரதாயங்கள் போன்ற விஷயங்களை அனுபவிக்கப் போதிய ஓய்வு நேரமோ சக்தியோ விருப்பமோ கிடையாது. இன்றைய ரசிகர்களுக்கு வாழ்க்கையில் பல சிக்கல்கள் இருப்பதினாலும் ஓய்வு நேரக் குறைவினாலும் மிக எளிய முறையில் ரசிக்கும்படியான 'டப்பா' சங்கீதத்தையே விரும்புகின்றனர். இந்தச் சூழ்நிலையில் சங்கீதக் கலைஞனும் மிகவும் குறைந்த நேரத்திலும் குறைந்த முயற்சியினாலும் கூடிய பலனை அடையப் பார்க்கிறான். இப்போதைய கலைத்தொண்டு உண்மையான கலை வளர்ச்சிக்கு ஏதுவாக இல்லாமல் ஏதோ பணம் சேர்ப்பதிற்தான் முக்கியத்துவம் காணப்படுகின்றது. ஒரு பாடகன் ரசிகர்களைத் திருப்திசெய்ய முயலுகின்றானேயன்றி அவர்களுக்குச் சங்கீத ஞானத்தைச் சம்பிரதாயப்படி போதிக்க முயற்சிப்பதாகக் காணப்படுவதில்லை. பண்டைக் கால சங்கீத நிலையையும் இன்றைய நிலையையும் ஆராய்ந்து வருங்கால சங்கீதக் கலைக்கு வழிவகுக்க வேண்டும். எமது சங்கீதத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருப்பதை எல்லாச் சங்கீத வித்துவான்களும் உணர வேண்டும். இது ஒரு பெரும் சோதனை காலம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கீதத் திருமூர்த்திகள் எமது சங்கீத சம்பிரதாயத்தை முறையே பேணிக் காப்பதற்கு வழிவகுத்திருக்கின்றனர் என்பது பேருண்மை. அவர்கள் இயற்றிய பாடல்களினாலேதான் இப்போதைய இசை சரியான வழியில் வளர்ச்சியடைந்து வருகின்றதெனலாம். அக்காலம் இசையை இயற்றியவர்களின் காலம். இக்காலம் அவற்றைத் திறம்படப் பாடுகின்றவர்களின் காலம். இக்காலம் சம்பிரதாயப்படி பாட வேண்டும் என்பதை ஆட்சேபிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியா தென்றாலும் அதிகக் கட்டுப்பாடு சங்கீதத்தின் வளர்ச்சியைக் குறைக்கும் என்றால் மிகையாகாது. ஒரு இசை வித்துவான் தமது கற்பனைக்கும் வித்துவத்திற்கும் ஏற்றவாறு புதிய அம்சங்களையோ புதிய வழியையோ புகுத்த முயலுவதை எந்த வழியிலும் கட்டுப்படுத்தப்படாது. அல்லது சங்கீதத்தின் வளர்ச்சி ஸ்தம்பித்துவிடும் (Music is Dynamic) இதற்கு இப்பொழுது எம்மத்தியில் பிரபல இசைப் பேரறிஞனாகவும் வித்துவானாகவும் ஆக்கியோனாகவும் விளங்கும் சங்கீத கலாநிதி ஜி. என். பாலசுப்பிரமணியம் அவர்கள் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். இவர் பழமையை பகிஷ்கரித்தாரென்றும் ஒரு பொழுதும் கூற முடியாது. உண்மையான சங்கீத வித்துவானென்றால் பழைய சங்கீத சம்பிரதாயங்களைக் கைவிடாமல், ஆனால் தனக்கென்ற ஒரு தனிப் பாணியை உடையவனாக இருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களுடைய சங்கீதம்தான் அவர்கள் இறந்த பின்பும் உலகத்தால் பாராட்டப்படும்.

எமது சங்கீத சம்பிரதாயப்படி கச்சேரியை அக்காலங்களில் வர்ணத்துடன் ஆரம்பித்து கனராகங்கள் ஒன்றில் கீர்த்தனையைப்பாடி பின் சில சௌக்க மத்திம காலக் கீர்த்தனங்கள் ஒரே தாளத்திலமையாது பாடி சிலவற்றிற்கு ராகங்களும் கற்பனை ஸ்வரங்களும் பாடுவார்கள். அதன்பின் ராகம் தாளம் பல்லவி பாடப்படும். இதையடுத்து விருத்தமும் தில்லானாவும். பின்னர் அஷ்டபதி, தாயுமானவர் பாடல், தேவாரம், திருப்புகழ் பாடி மங்களத்துடன் கச்சேரி முடிவடையும். சில வருடங்களுக்கு முன் பல்லவி பாடுவதில் விசேடமாக 8 க்களை 16 க்களை சௌக்கதில் பாடுவதில் நிபுணத்துவம் அடைந்த வித்துவான்கள் இருந்தனர். மூன்று வருடங்களுக்கு முன்பு மதராஸ் சங்கீத வித்வச்சபை நடத்திய சதஸில் முடிகொண்டான் வெங்கடராமையர் 16 களையில் பல்லவி பாடியதாகவும் திருவீழிமழலை சுப்பிரமணியம் அவர்கள் 32 களையிலும் பல்லவி பாடலாம் என்று கூறியதையும் அறிந்தோம்.

தற்காலத்தில் சங்கீதக் கச்சேரிகளில் சில குறைகள் இருக்கின்றன. வர்ணம் பாடுவதைப் பலர் கைவிட்டு விட்டார்கள். அல்லது கீர்த்தனம் பாடுவதற்கு எந்த அளவு இராகம் பாடவேண்டும், ஸ்வரம் பாடவேண்டும் என்பதைச் சம்பிரதாயப்படி அனுட்டிப்பதில்லை. இரசிகர்களின் கரகோஷத்தைப் பெறுவதற்காக பெரிய ஆவர்த்த ஸ்வரக் கோர்வையைப் பாடி அதிக அளவு கடந்த ததிங்கினத்தோம் வைத்து "அப்பிலாஸ்" தருகிறீர்களா? இல்லையா? என்று அப்பிலாஸ் வாங்குவது முறை. சங்கீதம் கேட்பவர்கள் முன்னேற்றமடையச் செய்வது வித்துவான்களின் மகத்தான பொறுப்பாகும். பாடுகிறவர்கள் தங்களை மறந்து நாத வெள்ளத்தில் மூழ்கிலயித்துப் பாடும் போது கேட்போரும் தம்மை மறந்திருக்கும் நிலைமை உண்டு பண்ணக் கூடிய சங்கீதமே உயர்ந்த சங்கீதம் என்பதற்கு அடையாளமாகும். இதற்கு மதுரை மணியவர்கள் சிறந்த உதாரணம். சௌக்க மத்திம துரித காலங்களில் கலந்து பாடுவதும் அதிலும் மத்திம காலத்திற்கே விசேட இடங்கொடுத்துப் பாடுவது உயர்ந்த கலையாகும். வெகு காலமாக இருந்து வரும் சம்பிரதாயத்தை அனுசரித்தும் லட்சிய லட்சணங்களை அறிந்து திறமான சங்கீதத்தைப் பாடுவது தான் உசிதமாகும். கேட்போரின் ருசியை மாற்றுவதும் பாடுபவரின் மகத்தான பொறுப்பாகும்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# "விவசாய மேதை"

## எஸ். பி. கிருஷ்ணன்

தோட்டக்காரன் என்று தூற்றப்பட்ட கணேசன் கரைச்சிப் பகுதியின் சிறந்த விவசாயியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

அவனை சிவநகர்க் கணேசன் என்று விவசாய உலகம் அழைக்கும். புதுப் புது வழிகளை, புதுயுக்திகளைக் கையாண்டு விளைச்சலைப் பெருக்கி, உணவு உற்பத்திக்கு ஊக்கமளிப்பவன், இந்த இளைஞன்.

கிளிநொச்சி, றெட்ரிக்கோ மைதானத்தின், திறந்த வெளியரங்கில் இன்று நடைபெறவிருக்கும் கலைவிழாவின்போது கணேசனுக்கு 'விவசாயமேதை' எனும் பட்டத்தை, வடபகுதி விவசாய உதவி இயக்குநர் அளித்து மதிப்புரை வளங்குவார், என்ற செய்தி தினசரிகளிலும், துண்டுப் பிரசுரங்களிலும் வெளியாயின.

திருவாளர் சி. சிதம்பரப்பிள்ளை, அன்றைய காலைத் தினசரியைப் படித்துக்கொண்டிருந்தபோது, தான் கலந்துகொள்ளப்போகும் நிகழ்ச்சிபற்றிய செய்தியைத் தேடிப்பிடித்து படித்தவர், திடுக்கிட்டு யார் இந்தக் கணேசன் .... அவனு ? என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டார்.

அவன்தான், சிவநகருக்குச் சென்று குடியேறினுன் என்று சொன்னுர்களே அவனுக .. இருந்தால் அவனுக்கு என் நாவால் பட்டமளிக்கவேண்டும் .. சிதம்பரப்பிள்ளையின் சிந்தனை குளம்பிற்று; சிந்தனை அலைகள் காலப் பெருங்கடலில் பின்நோக்கி விரைந்தன.

கணேசன் சந்திரபுரம் இந்துக்கல்லூரியில், எஸ். எஸ். சி. இறுதியாண்டு வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். ஆங்கிலத்தில் சிறப்பு பி. ஏ. பெற்ற சிதம்பரப்பிள்ளை அக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினுர்.

அவருடைய மகள் சகுந்தலை, அடுத்தாற்போல் உள்ள மகளிர் கல்லூரியில் எஸ். எஸ். சி. முதலாண்டு வகுப்பிற் படித்துக்கொண்டிருந்தாள்.

பருத்தித்துறை வீதியிலிருக்கும் மகளிர் கல்லூரியைக் கடந்து இந்துக்கல்லூரிக்குப் போகும் கணேசனின் கண்களில், தினமும் காட்சியளிப்பாள் சகுந்தலை. அழகி சகுந்தலை சகமாணவிகள் சூழ்ந்துவர தோழிகள் புடைசூழப் பவனி செல்லும் இராசகுமாரியைப் போலக் காட்சிதருவாள். செல்வக் குடும்பத்தில் பிறந்தவள் அவள்; செழுமையும், எளிமையும் கொண்டவள்.

அந்த எளிமைதான் கணேசனைக் கவர்ந்தது. படிப்பிலும், விளையாட்டிலும், கெட்டிக்காரனுகத் திகழ்ந்த கணேசனுக்கு காதல் ஒரு கலையாக, கற்பனைக்கு வித்தாக அமைந்ததேயல்லாமல், படிப்பைப் புறக்கணிக்கும்—வாழ்வைச் சீரழிக்கும்—புறப்பொருள் வினையாக விளங்கவில்லை.

காதல், கற்பனையை—கவித்துவத்தை—வளர்த்தது. கவிதை—கற்பனை—காதலை வளர்த்தது.

சகுந்தலைக்கு கணேசன் எழுதிய காதற் கடிதங்களில் நல்ல தமிழ் நடையும். புதுமைக் கவிதைகளும் இருந்தன.

சகமாணவிகள், சகுந்தலைக்கு துணைநின்றனரேயன்றி, துன்பஞ்சூழச் செயலாற்றவில்லை. ஆனுல் அழகி சகுந்தலையின் காதலைப் பெறமுயன்று தோல்வி கண்டு— கணேசன் மீது பொறாமை கொண்ட சகமாணவரோ அந்த இணைப்பைத் தகர்த்தெறிந்து வேடிக்கை பார்க்கத் தருணம் பார்த்திருந்தனர்.

அந்த நாளும் வந்தது

அன்று காலை—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேசன் வகுப்பில் நுழைந்தான். புத்தகங்களை மேசையில் வைத்துவிட்டு, அவசரமாக ஒரு புத்தகத்தை எடுத்து அதிலிருந்த கடிதத்தைப் பிரித்துப் படித்துக் கொண்டிருந்தான். அவ்வேளை, வகுப்பிற்கு வந்த ஆசிரியர் சிதம்பரப்பிள்ளைக்குக் காலை வணக்கம் கூறி எழுந்து நின்றனர் மாணவர்; கடிதத்திற் கவனமாகவிருந்த கணேசன் எழுந்திருக்கவில்லை.

அங்கே இருப்பது யார் ? என்றார் ஆசிரியர். 'கணேசன்' என்று ஒரு குரல் கேட்டது. கணேசன் நிலைமையைப் புரிந்து கொண்டு, எழுந்து நின்றான். மற்ற மாணவர்கள் அமர்ந்துவிட்டனர்.

என்ன கையில் ... என்று கேட்டுக் கொண்டே கணேசன் அருகிற் போன ஆசிரியர், அவன் கையில் கசங்கிக் கொண்டிருந்த கடிதத்தைப் பறித்தெடுத்தார்.

கடிதத்தைத் தன்மேசைமீது வைத்து அழுத்திப் படித்துப்பார்த்தார். இரண்டு வரிகளைப் படித்தபின் திருப்பி மறுபக்கம் பார்த்தார்.

சிதம்பரப்பிள்ளையின் கண்கள் கலங்கிச் சிவந்தன.

''கணேசன் இங்கே வா ''

அவன் எழுந்து அவரை நோக்கிப் போனான்.

'என்ன துணிவு உனக்கு ...?

அவன் மௌனமாய் நின்றான்

'போ வெளியே......?

அவன் நின்றான்.

'போடா வெளியே .. '

'எங்கே போவது சேர்... ..'

'போடா போய் தோட்டத்தைச் செய் உனக்குப் படிப்புச் சரிவராது .... ?

'போகிறேன் ஆனால் போடா என்ற நா, வா தம்பி என்று அழைக்கும்.. ... ஒரு நாள் வரும் '

அவன் போய்விட்டான்.

அன்று சகுந்தலை வழக்கம்போல கல்லூரியிலிருந்து வீட்டிற்குத் திரும்பினாள். ஆனால் அன்றிரவு பத்து மணிக்குப் பிறகு அவள் வீட்டில் இல்லை.

சகுந்தா... சகுந்தா . சகுந்தா .. ..

அடுத்த வீட்டிற்குக் கேட்டுவிடுமே ! இந்த அடாத வேளையில் எங்கே போனாள்.? எங்கு தேடியும் காணவில்லை.

சகுந்தலையைக் காணவில்லை.

இந்த வெட்கத்தை—வேதனையை— வெளியில் எப்படிச் சொல்லுவது என்று ஏங்கினார் சிதம்பரப்பிள்ளை.

'சொல்லாமல் என்ன செய்வது ... ஐயோ என்பிள்ளை எங்கே போனாளோ .. யார் ஏமாற்றிக் கொண்டுபோனானோ? போய் .. பொலிசில் ஒரு என்ரி' போட்டிட்டு வாருங்கோ என்று அழுதாள் மனைவி.

'எல்லாம் எனக்குத் தெரியும் ... நீர் பேசாமற் போய்ப் படும் .... '

கணவனின் முகம் சினந்து கோபத்தாற் சிவந்தது கண்டு அமைதியாகப் போய்ப் படுத்துக்கொண்டாள், மனைவி.

நெடுநேரம் நித்திரையின்றிப் புரண்டாள்; இருந்தாற்போல் நித்திரைக் கடலில் அகப்பட்டுக் கொண்டாள்.

சிதம்பரப்பிள்ளை நித்திரையின்றி, நிம்மதியின்றி அந்த இரவைக் கழித்தார்.

அந்த இரவில்—

அவர்களின் வீட்டுத் தோட்டத்தின் மேற்கு வேலியருகில் இரண்டு இளம் உள்ளங்கள், நெடுநேரம் பேசி, ஒரு ஒப்பந்தத்திற்கு வரமுயன்று தோல்வி கண்டன.

அதன் பயனாக—

சிதம்பரப்பிள்ளையின் மானம் காற்றில் உலவாமல் காப்பாற்றப்பட்டது.

கணேசன் போய்விட்டான்; ஊரை விட்டுப்போய்விட்டான்.

சகுந்தலை—

இரவு பன்னிரண்டு மணியடித்த சில நிமிடங்களுக்குப் பின்னர், மெல்ல அடியெடுத்து வைத்து வீட்டில் நுழைந்து, தன் அறைக்குச்சென்று படுத்துக் கொண்டாள்.

அடுத்தநாட் காலை, அதிகாலையிலேயே எழுந்து பொலிசிற்குப் போகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராகிக்கொண்டிருந்த சிதம்பரப்பிள்ளையரையும், அழுதுவடிந்த முகத்துடன், யாரைக் கேட்பது என்ற ஏக்கத்துடனிருந்த அன்னையையும் அதிசயத்திலாழ்த்தி, அவர்கள் முன்னல் கண்களைக் கசக்கியபடி, யாதுமறியாதவள் போல்—வந்து நின்ருள் சகுந்தலை. என்ருலும் அவள் முகத்தில் ஒரு மாற்றம்—ஏமாற்றமா?—தெரிந்தது.

அந்த மாற்றத்தைப் புரிந்துகொண்ட தந்தை, மனைவியுடன் கலந்து சிந்தித்து, மகளுடன் வழக்கத்திற்கு மாருன எதையும் பேசக்கூடாது எனத் தீர்மானித்தார்.

வயது வந்த பிள்ளை—செல்வ மகள்—அவள் மனம் புண்படக்கூடாது என்பது தான் காரணம்.

கல்லூரிக்குப் போன சிதம்பரப்பிள்ளையின் காதுகளில், கணேசன் இனி வகுப்பிற்கு வரமாட்டான், அவன் எங்கேயோ போய்விட்டான், என்ற செய்திகள் விழுந்தன.

முதல்நாளிரவு சகுந்தலை வீட்டிலில்லாத வேளையில் நடந்ததை யூகித்து உணர்ந்து கொண்டார்.

தன் மானத்தைக் காப்பாற்றிய மகளை அவர் உள்ளம் வாழ்த்தியது. என்ருலும் கணேசன் ஊரை விட்டுப் போனதற்கு சகுந்தலைதான் காரணம் என்ற இரகசியம் ஊருக்குத்தெரிய வரும்போது .. .

சிந்தித்துக் குழம்பிய சிதம்பரப்பிள்ளையை 'குட் மோணிங்' என்ற சொற்கள் சுய உணர்வுபெற வைத்தன.

அங்கே அதிபர் நின்று, மகிழ்ச்சிகாட்டி சிதம்பரப்பிள்ளையின் கையைப் பிடித்துக் குலுக்கினுர். அதிபரின் மறுகையில் இருந்த தந்தியை நீட்டினுர். அதைப் பெற்றுப் பார்த்த சிதம்பரப்பிள்ளையின் உதடுகள் சிரிக்க முயன்றன. முகம் முற்ருக மலரவில்லை.

'நன்றி சொல்லி அதிபரை அனுப்பி விட்டு, திருப்பித்திருப்பி தந்தியைப் படித்தார். கவலையகன்றது; களிப்புப் பிறந்தது. வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய தந்தியை மடித்து 'பைக்கற்'றில் வைத்துக் கொண்டு வெளியே சென்ருர்.

மறுநாளே ஆசிரியர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு, மறு பதவிக்கடிதத்தை எதிர்பார்த்திருந்தார்.

காலக்கடலில், பன்னிரண்டாண்டுகள் பலப்பல வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தி, மறைந்தன.

சி. ஏ. எஸ். அதிகாரியாக, பல பகுதிகளிற் கடமையாற்றிவிட்டு, விவசாய உதவி இயக்குநராக யாழ்ப்பாணம் வந்திருந்தார் சிதம்பரப்பிள்ளை.

கிளிநொச்சி, ருெட்ரிகோ மைதானத்தின் திறந்தவெளியரங்கில், கலைவிழாவைத் தொடக்கிவைத்து வடபகுதி விவாசாய உதவி இயக்குநர் பேசியவற்றிலிருந்து ஒருபகுதி. 'கலைகள் யாவிலும் சிறந்த கலை விவசாயக் கலை. இதுதான் இன்று நாட்டிற்குத் தேவையான கலை. இக்கலையில் சிறந்துவிளங்கும் திரு. கணேசனுக்கு இன்று 'விவசாயமேதை' என்ற பட்டத்தை அளிக்கிருேம்.

இவர் ஒரு இளைஞர். அறிவியல் மாணவனுக இவர் கல்லூரியில் கற்றபோது இவரது திறமையைக் கண்டு நான் ஆச்சரியப்பட்ட துண்டு. ஆம்! நான் இவரின் ஆசிரியனுக விருந்தேன். இவர் தொடர்ந்து படிக்காமல்—எதிர்காலத்தை உணர்ந்தோ என்னவோ?—விவசாயம் செய்யப் புறப்பட்டார். அன்று கல்லூரி ஒரு சிறந்த மாணவனை இழந்தது. ஆனல் இன்று நாடு செய்த பாக்கியத்தால் ஒரு விவசாய மேதை கிடைத்துள்ளார். விவசாயிகளுக்கு வழிகாட்டியாக; விவசாயிகளின் ஆசிரியனுக; ஆலோசகனுக, தோழனுக, மேதையாக இவர் திகழ்கிருர்.

படித்துப் பட்டம் ஒன்று பெற்றுவிட்டு அரசாங்க உத்தியோகம் தேடியலைந்து, காலத்தை வீணே கழிக்கும், வாலிபர்களின் கண்களுக்கு ஒரு கலங்கரை விளக்காகத் திகழ்கிருர் திரு. கணேசன். காற்சட்டை போடும் மாப்பிளை வேண்டுமென்று காத்திருந்து—கன்னிப்பருவத்தைக் கவலையோர்டு கழிக்கும் பெண்களுக்கு நான் கூறுவது என்னவெனில், இனிமேல் இத்தகைய விவசாய மேதைகளை, விவசாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன், விவசாய இளவல் போன்ற பட்டம் பெற்றவர்களை, மணந்து கொள்ளுங்கள்; உங்கள் வாழ்வு சிறக்கும்.

ஆசிரியர்கள், மாணவருக்கு விவசாயத்தை அறிவியல் ரீதியில் போதிக்க வேண்டும்.

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளை விவசாயிகளாக்குங்கள். அவர்கள் விவசாயப் பட்டங்கள் பெறவேண்டும் என்ற ஆசையோடு அவர்களைப்படிக்க வையுங்கள்.

மாணவர்களே! காலமாற்றத்தைப் புரிந்து; எதிர்காலத்தைப் புரிந்து, படியுங்கள். காலம் வேகமாக, பயங்கரமாக, மாறிக்கொண்டிருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டு, ஒளிமயமான எதிர்காலத்தை நோக்குங்கள். விவசாய மக்களின் பிள்ளைகளாக, விவசாய மண்ணில் பிறந்த நீங்கள், இந்த விவசாய மேதையைப் பொருமைக் கண்கொண்டு பாருங்கள். அப்படிப் பார்த்துக்கொண்டு படித்தால் நீங்களும் இத்தகைய பட்டங்களைப் பெற முடியும்.

விழா முடிவுற்றபின்னர், கணேசனைத் தனியே சந்தித்து மனம்விட்டுப் பேசி மகிழ்ந்தார் சிதம்பரப்பிள்ளை.

'தம்பி நீ என் வீட்டிற்கு வா .. ஒரு தேநீர் விருந்து தர விரும்புகிறேன் ..'

சில நிமிடங்கள் மௌனமாக நின்ற கணேசன் சரி ஐயா வருகிறேன், என்றான்.

மணப்பதானால் கணேசனையே மணப்பேன், என்று பிடிவாதங் கொண்டிருந்த சகுந்தலைக்கு இப்போது இருபத்தெட்டு வயது. இன்னும் மணமாகவில்லை. அவனை மறக்கச் செய்யவும், உயர் பதவியில் உள்ள வாலிபன் ஒருவனைத் தன் மருமகனுக்கவும் திரைமறைவில், நிகழ்ந்த திட்டங்கள், யாவும் செயலற்றுப்போக, மகள் விரும்பியவனை 'மேதை' யாகக் கண்டு, அவனையே மருமகனுக்கிக்கொள்ள முடிவு செய்தார், சிதம்பரப்பிள்ளை.

✶


*Leading House in Kilinochchi*

எமது வாழ்த்துக்கள்

# NEW SINGAPORE PHARMACY

KANDY ROAD, KILINOCHCHI.

For 162620

✶ PATENT MEDICINES
✶ MILK FOODS
✶ GROCERIES AND AGRO CHEMICALS

Prescriptions Accurately Dispensed
by Registered and Experienced Pharmacists


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## "ஊரும் பேரும்"

அ. க. இராசேந்திரம்
அதிபர், புனித திரேசா வித்தியாலயம்

ஊருக்கு பேர் உண்டு. பெயர் திரிந்து பேராயிற்று. பெயரினால் ஊரின் தனித்துவம் பேணப்படுகிறது. கரைச்சிப் பிரிவில் பழைய ஊர்கள் உண்டு; புதிய ஊர்களும் உண்டு. காரணப் பெயர்கள் உண்டு; காரியப் பெயர்களும் உண்டு: ஒரு சில ஊர்ப் பெயர்களை உற்று நோக்குவோம்;

உருத்திரபுரம்: இது 1950-ம் ஆண்டு உருவான குடியேற்றத் திட்டம். உருத்திரப் பெருங்குளம் இங்குண்டு. புராதன சிவாலயமும் - உருத்திராலயம் - இங்குண்டு. அதனால் உருத்திரபுரம் எனப் பெயரிடப்பட்டது.

ஜெயந்திநகர்: 1953-ம் ஆண்டு கிராம விஸ்தரிப்புத் திட்டத்தில் உருவாயிற்று. புத்த ஜெயந்தி (2000 ஆண்டு) காலத்தில் ஆரம்பமானபடியால் ஜெயந்திநகர் எனப் பட்டது.

கணேசபுரம்: 1937-ம் ஆண்டு உருவான கிளிநொச்சிப் பட்டண முதலாவது குடியேற்றத் திட்ட ஊர். முதற் கடவுளான விநாயகரின்–கணேசரின்-பெயர் சூட்டப்பட்டது. எக்காரியத்திற்கும் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பிப்பது தமிழர் வழமை. குடியேற்றத் திட்டங்களில் இதுவே பிள்ளையார் சுழி.

கரடிப்போக்கு: காடாக இருந்த காலத்தில் கரடிகள் குடி நீர் நோக்கி கண்டி வீதியை கடந்து சென்ற பகுதி. கரடிகள் போக்கு வரத்து நடத்திய பகுதி.

கனகபுரம்: படித்த வாலிபர்களுக்காக 1958-ல் ஆரம்பமான குடியேற்றப் பகுதி. வேலையற்ற படித்த வாலிபர்களுக்கு பணத்தை-பொன்னாகிய கனகத்தை ஈட்டிக் கொடுக்கும் திட்டமாதலின் கனகபுரம் என்றாயிற்று.

குமரபுரம்: 1954-ம் ஆண்டு ஆரம்பமான குடியேற்றப் பகுதி. முருகன் ஆலயம் இருப்பதால் குமரபுரம் என்றாயிற்று. கணேசரின் தம்பி குமரன் அல்லவா?

இராமநாதபுரம்: 1955-ம் ஆண்டு உருவான குடியேற்றத் திட்டப் பகுதி. இரணைமடுக் குளத்தைக் கட்டுவித்து கிளிநொச்சியை பொன் விளையும் பூமி ஆக்கிய சேர். பொன். இராமநாதனுக்கு நன்றிக்கடன் செலுத்த, அவர் பெயர் சூட்டப்பட்டது

வட்டக்கச்சி: 1954-ம் ஆண்டு உருவாயிற்று. வட்டக்காய்ச்சி என்ற மரங்கள் அதிகமாக இருந்தபடியால் இப் பெயர் வழங்கியது என்பது ஐதீகம்.

கல்மடு: இரணைமடுக் குளத்து நீர் கல்லுச் சுரங்கத்தின் ஊடாகச் செல்லும் பகுதி. இதனைக் கருவாக வைத்து அணை கட்டப்பட்டுள்ளது.

இரணைமடு: இரண்டு குளங்கள் - இரட்டைக் குளங்கள்-இணைந்து இருப்பதால் இப் பெயர் ஆயிற்று.

ஆனையிறவு: போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் வன்னிப் பகுதி யானைகளை ஊர்காவற்றுறைக்கு இப் பகுதி ஊடாகக் கொண்டு சென்றனர். வண்ணார்பண்ணைச் சிவன்கோயில் ஸ்தாபகர் திரு. வைத்திலிங்கம் செட்டியார் யானைத்தரகர் என்பதை தோம்பின் மூலம் அறியலாம்.

உமையாள் புரம்: 1959-ம் ஆண்டு தட்டுவன்கொட்டி, குறிஞ்சாத்தீவு மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட கிராமவிஸ்தரிப்புத் திட்டம். இவர்களின் இஷ்ட தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள். எனவே உமாதேவியாரின் பேரில் உமையாள்புரம் என நாமம் சூட்டப்பட்டது.

**தர்மபுரம் :** 1958-ம் ஆண்டு வகுப்புக் கலவரத்தால் அகதிகளாக யாழ் குடாநாட்டுக்கு வந்தவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டம் இது. தரும நோக்கில் ஆரம்பிக்கப்பட்டமையின் தர்மபுரம் என்றாயிற்று.

**கலேவெட்டித்திடல் :** கல் வெட்டுத்திடல் என்பது திரிந்து கலேவெட்டித்திடல் என்றாயிற்று. கல்வெட்டுத்திடல்-கல்வெட்டுக்கள் நிறைந்த மேட்டுப் பகுதி. நவீன ஆராய்ச்சியாளர் சிலர் கலே மானை வெட்டிய திடல் என்பர். இது சரியல்ல.

**புளியம்பொக்கணை :** புளியமரங்கள் நிறைந்த பள்ளத்தாக்கான பகுதி. பொக்கணை என்பது பள்ளம். குழி விழுந்த உரலே நாட்டுப்பகுதி மக்கள் இன்றும் பொக்கணை உரல் என்றே அழைப்பர்.

**அக்கராயன் :** இங்கு அக்கராயன் குளம் உண்டு. வன்னியர் ஆட்சியின் போது இராயர் என்ற குறுநில மன்னர்கள் வாழ்ந்தனர். குளம் தொட்டு வளம் கண்டனர். தற்போது மூன்று இராயர்களுக்கான சான்றுகள்தான் உண்டு. அக்கராயன், பல்லவராயன், கனகராயன் ஆகியோர் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

ஏனைய ஊர்களின் பெயர் பற்றிய ஆராய்ச்சி இடக்குறைவு காரணமாக இங்கு இடம் பெறவில்லே. ‘ஊரும் பேரும்’ என்ற பத்திரிகைக் கட்டுரைத் தொடர்பில் அவைகளேக் காணலாம். எனது ஆராய்ச்சிக்குதவிய கண்டாவளே, சங்கத்தார் வயல், பூநகரி வாழ் எண்பதைத் தாண்டிய பெரியார்கள் ஐவருக்கும், உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசபிள்ளே அவர்களுக்கும் பழமையின் பெயரால் நன்றிக்கடன் உருத்தாகட்டும்.

★

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனே செய்வோம். வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனே செய்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாச்சார சபை - கரைச்சி

## நிர்வாகசபை உறுப்பினர் :

போஷகர் : திரு. எம். ரீ. டபிள்யூ. அமரசேகரா இ.நி.சே.
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

உபபோஷகர்கள் : திரு. வீ. ஆனந்தசங்கரி
(தேசியப் பேரவை உறுப்பினர், கிளிநொச்சி)

திரு. ச. சு. முருகேசு
(பட்டினசபைத் தலைவர், கிளிநொச்சி)

திரு. கா. செல்லையா
(கிராமசபைத் தலைவர், கரைச்சி)

தலைவர் : திரு. இ. யோகநாதன் இ. நி. சே.
(காரியாதிகாரி, கரைச்சி)

செயலாளர் : செல்வி வி. துரைசாமி
(கலாச்சார உத்தியோகத்தர், கரைச்சி)

பொருளாளர் : திரு. எஸ். கே. இராசையா
(கிராமசேவையாளர், கிளிநொச்சி)

## ஆலோசனைக் குழு :

திரு. கே. மயில்வாகனம்
(நிறைவேற்றுப் பொறியியலாளர், கிளிநொச்சி)

திரு. எஸ். கந்தையா
(உதவி பொலிஸ் அத்தியட்சகர், கிளிநொச்சி)

டாக்டர் ஆர். எஸ். அமிர்தானந்தன்

திரு. கே. மயில்வாகனம்
பொது முகாமையாளர் கரைச்சி, தெற்கு ப. நோ. ச.

## நிகழ்ச்சிக் குழு :

திரு. தி. மார்க்கண்டு
,, கே. எஸ். வேலாயுதம்
,, சி. தியாகராசா
,, சீ. என். நடராசா
,, கே. தர்மலிங்கம்
,, நா. சோதிநாதன்
,, என். மாணிக்கசிங்கம்

Donated by:-
PROF. K. KAILASAPATHY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து : திரு. நா. தியாகராசா

மைதான அமைப்பு, பாதுகாப்பு, சோடனை ஒழுங்குகள் :

திரு. பி. இராமநாதன்
,, ஏ. சீ எஸ். சகாப்தீன்
,, டி பி யாப்பா
,, எஸ். சில்வா
,, எஸ். எஸ். ஆர். சிங்கம்

ஒளி : பட்டினசபைத் தலைவரும் அங்கத்தினர்களும்
திரு. கே. சிவகடாட்சம்பிள்ளை
,, கே. சிவபாதம்

ஒலி : திரு. இ. கிருஷ்ணராஜா
,, எம். மாசிலாமணி

விளம்பரம் : திரு. எம். யோகலிங்கம்
,, எம். கனகசபை
,, அ. சிவஞானசுந்ரதம்
,, சு. இந்திரராசா
,, பொ. நித்தியானந்தன்
,, எஸ். கதிரவேலு
,, க. சீவரத்தினம்

உபசாரக் குழு :

திரு. லங்கா நேசையா
திரு. எஸ். எஸ். செபரெத்தினம்
செல்வி சி. சுப்பிரமணியம்
,, த. கனகரத்தினம்
திரு. ஆ. மார்க்கண்டு
,, த. க. மகாலிங்கம்

மேடை அமைப்புக் குழு : திரு. ஏ. ஞானப்பிரகாசம்
திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை
,, வி. அருளப்பு
,, ம. அந்தோனிப்பிள்ளை
,, இ. நடராசா
,, ரீ. துரையப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சிப் பிரிவு கலைமன்றங்கள்

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம், பரந்தன்.
'ஸ்ரார்' நாடக மன்றம் கிளிநொச்சி.
கலை வளர்ச்சி நாடக மன்றம், கிளிநொச்சி.
மக்கள் கலைச்சங்கம்
தமிழிசை நாடக மன்றம், ஆனையிறவு.
நடன கலா மன்றம், பரந்தன்.
இன்னும் பல .........


அழகிய புகைப்படங்களுக்கு

# கமலா ஸ்ரூடியோ

கிளிநொச்சி.

**KAMALA STUDIO**

**KILINOCHCHI.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Ask Always*

# "ESVIEM RICE"

***GUARANTEED FOR***

**QUALITY**

**&**

**QUANTITY**

# MURUGAN RICE MILL

KILINOCHCHI

*Prop :*

# S. V. MURUGESU

**154, Hospital Road,**

**JAFFNA.**

***Phone : 564***

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சிப் பிரிவு

கலை விழாவிற்கு

எமது இதயபூர்வமான வாழ்த்துக்கள்

# K. S. SELVADURAI

## KUMARAN & C .

**POWN BROKER**

KANDY ROAD,

KILINOCHCHI.

# க. சி. செல்வத்துரை

## குமரன் அன் கோ

கண்டி வீதி,

கிளிநொச்சி.

நகை அடைவு பிடிப்பவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்றி!**

மலர் சிறக்கக் கட்டுரை வழங்கியோர்
மலர் வெளியிட விளம்பரமாய் நிதி வழங்கியோர்
மலர் மணக்க ஆசியுரை வழங்கியோர்
மலருக்கு ஒரே நாளில் அட்டைப்படம் தயாரித்தளித்த
'ஞானம்ஸ் ஸ்ரூடியோ' உரிமையோர்
மலரை நன்முறையில் வடித்திட்ட ஆசீர்வாதம் அச்சகத்தோர்
விழா சிறக்க உதவியோர்

அனைவர்க்கும்

மலர் அமைக்க எமக்கு வாய்ப்பளித்திட்டவர்க்கும்
எங்கள் மனமுவந்த நன்றி.

—விழா மலர்க்குழு—

162620

University of Jaffna
162620
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Telephone
தொலைபேசி } 248

T'gram — 'Coosoc'
தந்தி — 'கோப்சொக்'

விலையில் குறைந்த

தரத்தில் சிறந்த

பெற்றோலியம் கூட்டுத்தாபன

களை, கிருமி நாசினிகளை

எமது கிளைகளில் பெறுங்கள்

# கரைச்சி தெற்கு ப. நோ. கூ. ச.

## கிளிநொச்சி

Ceylon Petroleum Corporation

Agro Chemicals

Act to Kill

# KARACHCHI SOUTH M. P. C. S. Ltd.

## KILINOCHCHI.

UNIVERSITY OF JAFFNA
Library
SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சிப் பிரிவு கலை விழா
நிறைவுபெற
மனமுவந்து வாழ்த்துகிறது

## கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் - பரந்தன்

எங்களிடம் பாவனையாளர்களுக்குத் தேவையான

சகல உணவுப்பண்டங்கள்
துணிவகைகள், சேட்வகைகள்
உழவுயந்திர உதிரிப்பாகங்கள்
பசளை வகைகள்
கிருமி, களை நாசினிவகைகள்

முதலியன மலிவான விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**விவசாயிகளே !**
**உங்கள் விளைபொருட்களை எம்மிடம் கொடுத்து**
**நியாயமான விலையைப் பெறுங்கள்.**

நுகர்வோர் நலனே எம்சேவை இலட்சியம் !

கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

தந்தி : 'கரைச்சியப்பல' தொலைபேசி : 247

ஆசீர்வாதம் அச்சகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org